கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி—உசு.] விபவஹூ ஐப்பசிமீ [பகுதி—கஉ.

Vol. XXVI. October-November-1928. No. 12.

## கவியின்பம்.

[ரு. சு0-ஆம் பக்கத் தொடர்ச்சி].

வடமொழி தென்மொழி யென்னும் இருமொழியினும் புலமை வாய்ந்த அரசகேசரியென்னும் ஈழத்துப்புலவர், வடமொழி யிரகுவம்சத்தின்வழியே தமிழில் யாத்த இரகுவம்சக் கவிகளுள்ளும் பல தன்மை, உவமை, உருவகம், ஏது, தற்குறிப்பு, வேற்றுமை, திரிபு முதலிய அணிகளான் மிளிர்ந்து கற்றோர்க்குக் கழிபேரின்பங் காட்டுகின்றன. அவற்றுள்ளுஞ் சில காட்டுதும்.

வென்றாரைத் தோற்றார் சுமத்தலாகிய ஓர் வழக்குப் பண்டைக் காலந்தொட்டுள்ளது. அவ்வழக்கை இவர் பெண்களைச் சுமக்கும் பிடியின்மேலேற்றி,

நன்னடைப்பிடிக்குலங்கணவ்வியங்கணுரையே
வென்னிடைப்பரித்தல்செய்துமெல்லமெல்லவேகின
சொன்னடைப்பதம்வருந்திடாச்சுமப்பதன்றியே
சென்னடைக்குடைந்தபோதுபின்னையென்சொல்செய்வதே.

எனக் கூறினர். பெண்களை யானைகள் சுமப்பது இயற்கையாக, அவ்வியற்கையினை யொழித்துச் சுமப்பதற்கு நடைக்குடைந்தமையைக் காரணமாகக் கற்பித்துக்கூறும் ஏதுத் தற்குறிப்பேற்றம் என்னு மணி நோக்குவார்க்கு எத்துணை யின்பம் அளிக்கின்றது! இச்செயல் கத்துரு

வுக்குத் தோற்ற விநதைபொருட்டு அவள்மகனாகிய கருடன் கத்துருவின் மக்களாகிய பாம்புகளைச் சுமந்து திரிந்தனன் என்னுஞ் *சரித்திரத்தானும் அறியத்தக்கது. கந்தபுராணகாரரும்,

"மேற்றான்விளையுமிஃதென்றேவினையமுட
னாற்றான்மொழிந்தேன துசிறிதுங்கேட்டிலையே
மாற்றானெனவந்தமைந்தனுடன்போர்செய்து
தோற்றாயேயற்றான்மயிலாச்சுமக்குதியோ"

எனக் கூறியசெய்யுளை மீண்டு நோக்கற்பாற்று. இக்காலத்தும் சிறுவர் விளையாட்டொன்றினும் இச்செயல் வழங்குகின்றது. அதனானும் அவ்வழக்கு அறியத்தக்கது. இங்ஙனமே யிவ்வழக்கை வலியுறுத்திப் பின்னும்,

பாவுநல்லெழிற்கொடேபடைக்கணார்கண்மேவியே
விரவுவேலர்தம்மொடும்விளங்குவார்களாயினும்
இரவைவெல்லியற்பசும்பொனிட்டிழைத்ததட்டினா
லரவவல்குலுக்குடைந்ததேருமன்னவரமரோ.

எனக் கூறுதல் காண்க. இச் செய்யுளின்கருத்து, தோரானது தன் கண் படைக்கணாரும் வேலரும் விளங்குவார்களாயினும் தட்டினால் ஒருசிறிய வல்குலுக்குத் தோற்றமையினாலே அவரைச் சுமக்குந்தன்மையைப் படைத்தது என்பது. இச்செய்யுளின் முதலிரண்டடியிற்கூறப்பட்ட படைக்கணார்கள் வேலர் என்னுஞ் சொற்கள் தொனிப்பொருளினாலே படைவீரர் வேல்வீரர் என்பதையுங் குறிப்பித்துத் தேரின் வலிமையைச் சிறப்பித்தும், அத்துணை வலிபடைத்த தேர் ஒரு தட்டினாலே ஒரு சிறிய அல்குலுக்குத்தோற்றது பேரதிசயம் என்பது தோன்றவைத்து அதன் தோல்வியை யற்புதமாக்கியும், அங்ஙனந் தோற்ற தேர் தான் மென்மையுடையதென்று அவரைச் சுமக்காமல் விடமுடியுமா? தான் தோற்றமையினாற் சுமந்தே சென்றது என எதுத்தற்குறிப்பாக்கியுங் கூறியது மிக இன்பந்தருவதேயாம்.

இன்னும், பெண்கள் குதிரையேற்றஞ்செய்புங்கால் ஆடவர்கள்போல் அஞ்சாதிருந்து செய்வார்கள் என்பதையும் மிக்க கதியோடு செல்லுவார்கள் என்பதையும் அமைத்துச் செய்யப்பட்ட,

---

*இச்சரிதத்தைப் பிறவாறுமுரைப்ப.

வல்லியற்றுரங்கமேகுகிற்பதும்மனங்கொளா
செல்லியற்பொன்மாதர்மீதிருப்பதூமுணர்ந்திடா
வல்லியற்கதுப்பினருமாவுமாதலாற்பரி
செல்லுகிற்பதோபொனூர்திறத்தையோதேரிப்பதே.

என்னுஞ் செய்யுளும் மிக இன்பந் தருவதாம். இதன்கண் முதன்மூன்றடியையும் நிரனிறைப்பொருள்கோள் அமையவைத்துச் செய்திருப்பதும், மகளிர் மனங்கொளாமையையும் பரியுணர்ந்திடாமையையும் ஏதுவாகக் கொண்டு மகளிர் அஞ்சாதிருந்து செலுத்துமியல்பையும் குதிரையின் செலவையுஞ் சிறப்பித்திருப்பதும் ஆசிரியரின் நுண்ணறிவைப் புலப்படுத்தல் காண்க.

இன்னும், சிவிகை மற்றைய வாகனங்களுட் சிறந்ததாக மதிக்கப்படுதற்குத் தான் பிறரைச் சுமந்தும் தன்னையும் பிறர்சுமக்கச் செல்லுதலை ஏதுவாக்கி,

குலப்பொனாரையேயெடுத்தல்செய்தும்விற்குலங்கொடா
ணிலத்துறாதுசிற்சிலர்நிரந்துதாங்கவேகலா
னலத்தியானம்யாவுமுற்றவண்ணநண்ணுமோபடித்
தலத்தியாதினுஞ்சிறந்ததகைபடைத்தசிவிகையே.

எனக் கூறிய செய்யுளிற் றோன்றுமின்பம் எவ்வளவு அதிசயிக்கத்தக்கது. இதன்கண் சிவிகை பொன்போலும் மகளிரைச் சுமந்தும் தான் தாழாது மேன்மையோடு சென்றது என்பதுபட முன்னிரண்டடியை யமைத்ததும் அங்ஙனஞ் சென்றமையை அச்சிவிகையின் மேன்மைக்கு ஏதுவாக்கிக் கூறியதும் மிக வியக்கத்தக்கதேயாம். இதன்கண் 'ஏகலால்' என்பதை 'ஏகின' எனப்பாடங்கொண்டு தகைபடைத்தமையை ஏகுதற்கு ஏதுவாக்கினு மமையும். இதற்கு இயைய "உற்றவண்ணம் நண்ணுமோ" என்பதற்குச் சென்றவண்ணஞ் செல்லுமோ என்பது பொருளாகக் கொள்க.

இன்னும், யானையை மேகமென்று மயங்கியுணர்ந்த மனம் பின் அல்லவென்று சந்தேகிக்குமா? அன்று; ஏனெனில், பிறையும் மழையும் மின்னும் முழக்கும் ஆகிய இவைகள் காணப்படுதலால் என்னுங் கருத்தமைத்து ஏதுவோடுகூடிய மயக்கவணியாகக் கூறிய,

நிறையுமுள்ளவேகபானேநீலமேகமென்னலா
யறையுமுள்ளமல்லவென்றயிர்க்குமோமருப்பிணைப்
பிறையுமுள்ளமதமழைப்பிறப்புமுள்ளவோடைமின்
முறையுமுள்ளவுலகமஞ்சுமூதிர்முழக்குமுள்ளவே.

என்னுஞ் செய்யுள் நோக்க நோக்க எவ்வளவு இன்பம் அளிக்கின்றது. இங்ஙனமே இவ்வணியமையக் கூறிய,

தென்னிரந்ததேரைமேருவென்றுசெப்பலன்றியே
முன்னியங்கலொன்றுகொண்டுமல்லவென்னமுடியுமோ
பொன்னிலங்குமுடியனந்தமுறும்விசும்புபுகுமாா
நன்னிலங்தொடும்வாத்திஞரிருக்கைமருவுமே.

என்னுஞ் செய்யுளும் மிக இன்பந்தருவதாம். எங்ஙனமெனில் தேரை மேருவென்று சொல்வதன்றி, அதனியக்கம்பற்றி அல்லவென்று சொல்லுதல் கூடாது; ஏனெனில், மேருவைப்போல அனந்தம் முடிகளுள்ளன; ஆகாயத்தைத் தீண்டியுள்ளன. பாதலத்திற்புக்குள்ளன. மேலோரிருக்கையைப் பொருந்தியுள்ளன; ஆதலாலெனப் பொருடருதலின். இச்செய்யுளில் இயங்கலால் தேருக்கும் மேருவுக்கும் வேற்றுமைகூறுதலால் வேற்றுமையணியும் தோன்றநிற்றல் காண்க. இங்ஙனமே,

சினத்தியங்குமாருதச்செறிப்பினிற் சிறக்குமா
வனேத்தையுந்தெரித்ததல்லவென்னிலல்லவாகுமோ
கனத்துறுந்துகட்கிளைத்தகல்லெனக்கலித்தமா
மனத்தையுந்தணித்தசெல்க்திக்கண்மெய்ம்மறைந்தவே.

என்னும் செய்யுளும் வேற்றுமையொழித்து முன்னே அணியாய் இன்பந்தருதல் காண்க. குதிரைகளைக் காற்றென்று காண்பித்து அல்லவென்றல முடியுமா? அன்று; ஏனெனில், காற்றைப்போலத் துகளை உண்டாக்கின; கல்லென்று ஒலித்தன; மனத்தினும் வேகமாய்ச்சென்றன; மெய்ம் மறையப்பெற்றன; ஆதலால், என்பது இதன் பொழிப்பு.

இன்னும், அரசர்களுடைய இருபக்கமும் சாமரைகளிரட்டலைத் திங்கள் வடிவுவேறுபட்டு வீழ்தலாகக் குறித்து உவமைபுணர்த்தியும், திங்கள் வடிவுவேறுபடுதற்கு, மகளிரின்முகத்தை ஏதுவாக்கியுங்கூறிய,

தகைத்திறத்துமன்னவர்தயங்குபாலசாமரை
திகைக்கணின்றிரட்டன்மாதரார்முகங்கள்செவ்வியே
யுகைக்குலைந்தமதியிறங்கியுருகிமெய்க்நெடுத்தரு
மிகைப்படைத்திரண்டுபாலும்வெப்பின்வீழ்தலொக்குமே.

என்னுஞ் செய்யுள் ஏதுவோடுகூடிய தற்குறிப்பேற்றம் என்னும் அணியாகி மிக இன்பந்தருதல் காண்க.

இன்னும், யானைகளின்மே லுயர்த்திய பலநிறக்கொடிகளுக்கு வானவில்லானது மலைகளின்மேலே தன் ஓர் காலையூன்றித் தன் வளைவு நிமிர்ந்து தன் வடிவிலுள்ள பலநிறமும் ஒவ்வொன்றாகப் பிரிந்து நின்றதுபோலு மென அற்புத உவமையாகக் கூறிய,

பரியமால்களிற்றின்மேலெடுத்தபச்சையின்னொடே
கரியசெய்யவெளியவொண்படைத்தமைத்தகதலிகை
யுரியமேகதனுவிலங்கலுச்சிமேலொர்காலதாய்ப்
பெரியகூனிமிர்ந்துருப்பிறிந்துநின்றதொக்குமே.

எனக் கூறிய செய்யுளும் இன்பந்தருவதேயாம்.

இன்னும், பெண்களின் வெருண்ட நோக்கிற்கும் மென்மைக்கும் மானை உவமையாக்கியும், ஆடவர்களின் வீரநோக்கிற்கும் ஆண்மைக்கும் மடங்கலை உவமையாக்கியும் ஆடவர்களுடைய உருவின் றோற்றப் பெருமைக்கும் மகளிருடைய உருவின்றோற்றச் சிறுமைக்கும் முறையே கற்பகதருவையும் காமவல்லியையும் உவமையாக்கியும் அவர்களின் நிமிர்ந்தநடைக்கும் தாழ்ந்தநடைக்கும் முறையே களிற்றையும் பிடியையும் உவமையாக்கியும் கூறிய,

நற்படைக்கடைக்கணவ்வியன்செவ்விநங்கைமா
ரெற்பரித்திலங்குசிங்கவேறெனச்செல்வேலவர்
கற்பகத்தையொக்கிலொப்பர்காமவல்லிகானமா
வெற்பையொக்கிலொப்பர்மென்பிடிக்குலத்தைமீளவே.

என்னுங் கவியும் எவ்வளவு இன்பந்தருகின்றது. இக்கவியில் 'ஒக்கிலொப்பர்' என்னும் வைப்பும் மிகவுஞ் சொற்சுவை தருவதேயாம்.

இன்னும், அரசர்களும் அவர் மனைவியரும் அவர் பிள்ளைகளும் கூடச்செல்லுமியல்பிற்கு முறையே திருமாலையும், இலக்குமியையும், மன்மதனையும் இயைபுற உவமைபுணர்த்தி,

அனந்தவேளுலப்பில்பொன்னளப்பில்கற்பகத்தொடை
புனைந்தமாலொராறணிந்துபோவதாவதுள்ளதேல்
வனைந்தமாலையிளைஞர்மாதர்மன்னரார்திறத்துநேர்
நினைந்துகூறலாகுமல்லவென்னினேருமில்லையே.

எனக் கூறிய செய்யுளும் இயைபுவமையாகி இன்பந் தருதல் காண்க. இவ்வுவமைகள் அழகும் நிறமும் மேன்மையும்பற்றி வந்தனவேயாம்.

இன்னும், எழிலைப்பாலைப்பூவின்மதநாற்றத்தைக்குறிப்பிப்பதற்கு,

வேலைசெய்தமும்மதச்செருக்கினோடிவேழநீள்
சோலைசெய்தகானெலாந்துகட்படத்துகைத்தன
மாலைசெய்தபோதுவாய்மலர்ந்துநின்றவேழிலைப்
பாலைசெய்தவஞ்சமென்கொல்பன்னிநின்றுபகர்வதே.

எனக்கூறிய செய்யுள் மிக வியக்கத்தக்கதே. ஏனெனின், யானை வேற்று யானையின் மதமணமெனக்கருதிக் காடெங்குந் துகைக்கும்படி மத நாற்றத்தையுண்டாக்கியதாகக் கூறினமையினால். இச்செய்யுள், கம்பர் கூறிய,

"பாத்தயானையின்பதங்களிற்படுமதநாறக்
காத்தவங்குசநிமிர்ந்திடக்கால்பிடித்தோடிப்
பூத்தவேழிலைப்பாலையைப்பொடிப்பொடியாக்கிக்
காத்திரங்களாற்றலத்தொடுந்தேய்த்ததோர்களிறு"

என்னுஞ் செய்யுளினும் மிக இன்பமமைந்தது. ஏனெனின், அவர் அச்செய்யுளில் எழிலைப்பாலைப்பூவொன்றையே யானை துகைத்ததாகக் கூற, இவர் அங்ஙனமன்றிக் காடுமுழுவதையும் துகைத்ததாகக் கூறலின். காடுமுழுவதையுந் துகைத்ததற்குக் காரணம் எழிலைப்பாலைப்பூ மறைந்துகிடந்து காடெங்கும் மணஞ்செய்தமை.

இன்னும் ஓர் காளை தானேறிச்செல்லுங் குதிரையின், கடிவாளத்தை முன் வலப்பக்கத்தே யிழுத்தும் பின் இடப்பக்கத்தே யிழுத்தும்

தான் செல்லவேண்டிய திசைக்குக் குதிரையைத் திருப்பிச்செல்லுதல் தனக்கு இருபக்கத்தும் வரும் பெண்களுடைய கண்களாகிய அம்புகள் இரண்டுபக்கத்தும் விசையாகவந்து படுந்தொழிலுக்கு விலகிச்செல்லுதல்போன்றிருந்தது என்னும் கருத்தமைத்துத் தற்குறிப்பேற்றமாகக் கூறிய,

குசைவல்ம்வலித்துமற்றையிடமுறக்குறுக்கியும்
திசைமுகந்திரித்துமாவுகைத்தோர்காளைசெல்வன
விசைதருஞ்சொன்மாதராரிருங்கணம்பிரண்டுபால்
விசைபடும்வினைத்தொழிற்குவிலகியேகல்போலுமே.

என்னுஞ் செய்யுள் எவ்வளவு இன்பந்தருகின்றது. இச்செய்யுளை நோக்குங்கால் குதிரையை வலித்துங் குறுக்கியும் ஓர் காளை சேறல் இடப்பக்கத்துவரும் அம்புக்கு விலக வலந்திரித்தும், வலப்பக்கத்துவரும் அம்புக்கு விலக இடந்திரித்தும் விலகிச்சேறல் போன்றது என அமைத்துக் கூறியது எவ்வளவு நுட்பமாக விருக்கின்றது.

இன்னும், ஆற்றுளமிழ்ந்து மறைந்துகிடக்கும் யானையின்மதம் அவ்வாற்றின் நடுவே நீரில் நீண்டு பாய, அதன் நிறம் தோன்றுதற்குப் பாற்கடலில் ஸ்ரீமந் நாராயணமூர்த்தி துயிறலை உவமைபுணர்த்தி,

உந்தியினுப்பண்மீதோங்குமான்மதச்
சந்தமேதோன்றல்வெண்டரங்கமேயபாற்
சிந்துவினுலகெலாமளந்தசேவடிச்
சுந்தரனெடிதுறத்துயிறல்போன்றதே.

என்னுஞ்செய்யுளும் மிக இன்பந்தருவதேயாம். ஈண்டு, 'உலகெலாமளந்த சேவடிச் சுந்தர'னெனத் திருமாலின் திரிவிக்கிரமாவதாரவடிவை உவமைபுணர்த்தியது மிக வியக்கத்தக்கதேயாம்.

இன்னும், யானை துதிக்கையை வீசிவரும்போது கையிலிருந்து விழும் நீர்த்திவலைகளுக்கு வீசுஞ்சாமரையின் பொலிவை உவமை புணர்த்தி,

தாவிகற்காரிமெய்க்கரியசட்டையிற்
றாவிகற்சைவலமாகஞ்சுற்றிட
மீவிசைத்தெதிரெதிர்வெடிவெண்சாமரப்
பூவினிற்புழைக்காந்திவலைபோதா.

என்னுஞ் செய்யுளும் மிக இன்பந் தருவதேயாம்.

இன்னும், ஓடும் வேகத்தாற் கூந்தல் குலைந்து காலைப் பின்னிக் கொள்ளவும், காலிற் சிலம்புகள் மேலேறியுங் கீழிறங்கியு மொலிக்கவும், அச்சத்தால் விரைந்தோடுகின்ற மகளிர் தம் முயிர்போவதும் பாராது ஓடுவார்கள் என்னுங் கருத்தமைத்து,

கற்றையங்கூந்தருழ்ந் துகாறடுத்தொருங்குகட்டித்
தெற்றிடவருந்தியேகுஞ்செல்வியர்சிலம்பிரண்டை
மற்றடுத் துடையதோர்நுண்வல்லிமென்மருங்குலிற்ற
திற்றதென் றிரங்கியாவியேகவுமேகல்செய்வார்.

எனக் கூறிய செய்யுளும் அச்சச்சுவையைத் தந்து மிக இன்பந்தருதல் காண்க

இன்னும், பெண்காள்! கண்களாகிய வேல்களையும் முலைகளாகிய யானைகளையும் நீவிர் தாங்கியது எம்மைக் கொல்லத்தானே? அவை இந்த யானையின்மேற் செல்லாவோ? என்று பெண்களுடைய கையைப் பற்றிக்கொண்டு அவரைக் கொண்டுபோவார் என்னுங் கருத்தமைத்துக் கூறிய,

வெற்றிசெய் துணைக்கண்வேலும்வெம் முலைக்களிறுஞ்செய்யும்
குற்றமிலெம்மனோரைக்கொல்லவோபடைத்ததெல்லாம்
மற்றிதன்மேற்செல்லாவோமாதரீரென்னவண்கைப்
பற்றுபிடியன்னாரைப்பைப்பையக்கொண்டுபோவார்,

என்னுஞ் செய்யுளும்;

பிராமணர்களே! இந்த யானையைத் தடுக்கும்படி உங்கள் வேதமந் திரங்களைச் சொல்லுங்கள் சொல்லுங்கள், என்று சிரித்துச் சிரித்து அவரை உயிரைக் கொடுக்கும்படி கையைப்பற்றிக் கொண்டுபோவார் என் னுங் கருத்தமைத்துச் செய்த,

நடுக்குமாலந்தணீர்காணவிலும்பிங்கிதனைநன்னர்
தடுக்குமாறரியவேதந்தானெனநகைத்துநங்காய்
கடுக்குமாறங்கைபற்றியங்கவராவிதன்னைக்
கொடுக்குமாறெண்ணிவல்லேசேட்புலங்கொண்டுபோவார்.

என்னுஞ் செய்யுளும் நகைச்சுவையைத் தோற்றுவித்து இன்பந்தருதல் காண்க.

இன்னும், சிந்தர்கள் ஓடும் இயல்பினைக் குறிப்பித்துப் பழுவடங்க வுலாவுகின்ற விசைபொருந்திய கையையுடையராய், ஒருகாலின் குதியி லே மற்றைக்காலின் பெருவிரல் பொருந்த வோடி, நான்குமுழஞ்சென்ற பின் ஓர் காததூரஞ்சென்றதாக வெண்ணிச் சிந்தர்கள் வருந்துவார்கள் என்னுங் கருத்தையமைத்துக் கூறிய,

ஒன்றியபழுவடங்கவுலாவிசைக்கையராகி
மின்றிகழ்குதிச்சுவட்டிற்பெருவிரன்மிதிப்பவோடிக்
கன்றியமுழமோர்நாலுகடந்தபின்காதமொன்று
சென்றெனவுள்ளஞ்சோர்ந்துதியங்குவார்சிந்தரெல்லாம்.

என்னுஞ் செய்யுளும்;

ஒருகை (பலமுறைபோட்டலாற்) காய்த்த முதுகிற்போட்ட பையை இறுகப்பிடித்துக்கொள்ளவும், மற்றைக் கை விழாதபடி தலைப்பாகை யைப் பிடித்துக்கொள்ளவும், வழிதப்பாதபடி முன்னும் யானைவருகின்ற தோ எனப் பின்னும் பார்க்கின்ற முகத்தையுடையராய் வணிகர் இருந் தாலுஞ் சோர ஓடுவார் என்னுங் கருத்தமைத்து,

கைத்தலமொன்றுமீண்டகாய்ப்புடைவெரிநிற்போட்ட
பைத்தலைபிடிப்பவொன்றுபுகாதலைப்பாகுபற்ற
மொய்த்தலைவெய்திப்பின்முன்பார்த்திடுமுகத்தாகி
யெய்த்தவினிருந்தாள்சோரவேகுவார்வணிகரெல்லாம்.

என்னுஞ்செய்யுளும் ஒடுங்தொழிலியல்புணர்த்தித் தன்மைநவிற்சியணியாகி எத்துணையின்ப மளிக்கின்றன.

இன்னும், அயற்புலத்தினின்றும் ஆண்ஞெண்டுவர, அதன் வாவையறிந்து ஒரு பெடைஞெண்டு தான் அதற்கு விருந்துசெய்யும்படி, நம்மிடத்திலே சிற்றுணவுண்டு; அதனையுண்டு இன்று இங்கு தங்கிப்போகலாம்; அங்ஙனமன்றி உணவுமுளதாக மறுத்துச்சென்றால் அப்பால் பெருநாரை நீர் இறக்கும்படி வரும்; அதன் வலி பெரிது. செல்லவேண்டாம் என்று வழிவிலக்குமென விருந்தயர்வோரியல்பை ஞெண்டின் மேல்வைத்து,

விரியவருமயற்புலத்துவிளங்கலவன்வரவோர்ந்து
தெரியவரும்போரசைச்சிறுகூழுமுளதாக
மரியவரும்பெருநாரைவலியப்பான்மறுத்தேகிற்
பெரியதெனவிருந்தயரவழிவிலக்கும்பெடைஞெண்டே.

எனக் கூறிய செய்யுளும்;

ஒருவன் கட்குடித்துத் தன் மனைவி மக்கள் முதலிய வினத்தோடு பிணங்கி அறிவுமயக்கத்தினாலே கால் ஒன்றோடொன்று பின்னுதலும் தலைமயக்கமும் பொருந்தி (அங்ஙனம் உண்டான மயக்கத்தைக்கண்ட நண்பன் ஒருவன்) மயங்கிவிழாதபடி தாங்குமாறு கொடுத்த கையிலே நின்று இருபக்கத்தும் தள்ளாடிக்கொண்டுநிற்கு மியல்பை நெல்லின்மேலேற்றி,

மணப்பதுமப்பொகுட்டேற்மதுவருந்தியருந்தினவப்
பிணக்கினெடுங்கான்மயக்குந்தலைமயக்கும்பெரிதாக
விணக்கினிமிர்கழைக்கரும்புநனிகொடுத்தவிலைக்காத்திற்
றணப்பறநின்றிருபாலுந்தள்ளாடுந்தடஞ்சாலி.

எனக் கூறிய தற்குறிப்பும் மிக இன்பந்தருவனவேயாம்.

(தொடரும்).

சி. கணேசையர்.

ஸ்ரீ:

# குருபரம்பரை

# எம்பெருமானார்வைபவம்.

[ருஉஉ-ம் பக்கத்தொடர்ச்சி.]

அப்படிதினங்கள்பலசெலவிந்தவவனியாள்விட்டலதேவ
னெப்பருநாமமுடையவேந்தனையுந்திருத்தியாங்கோங்குதொண்டர்களின்
முப்பதுபேரையத்திருப்பதியின்முறைதிகழ்கிராமமொன்றாக்கித்
தப்பறவிருத்திவேந்தனைக்கொண்டேதடையறவிளையமண்டியத்தை.? (ருககூ)

கேத்திரமாகவாங்கவர்க்களிப்பித்திருந்தனன்கிளர்ந்துவானவர்கள்
தோத்திரஞ்செய்யும்வேங்கடப்பொருப்பிலுறைபவர்துகளிலானணைதல்
பார்த்திருந்தினர்களணைந்திலாமையினாற்பலரொடுமெழுந்தநந்தாழ்வான்
காத்திரமென்னையினியெடாதாண்டான்கழறொழக்கதுமெனப்புகுந்தான். (ருஉ0)

வந்தநந்தாழ்வான்றிருமலைமீதின்மன்னுசீர்முதலிகளோடு
மெந்தையாமெதிகடலைவனையிறைஞ்சியெம்பிரானெழுந்தருளாதே
சிந்தையாருன்றன்வேங்கடப்பொருப்பிற்றேவனையடிவணங்காதே
யிந்தமாநிலத்தோரிதுவென்கொலென்னவிருந்தமையெதன்பொருட்டென்றான்.

அடிதொழுதிந்தப்படிபகர்ந்தருளுமன்பனையன்பினானோக்கி
முடிவிலாப்பத்திவாரிதியனையாய்முத்தராய்நித்தராய்நிகழும்
வடிவுடைவானோர்த்திருமலைமேன்மன்னுவர்சராசரமாகிக்
கொடியனேன்செடியார்யாக்கைகொண்டதன்மேலேறுதறகுவதோகூறாய். ()

என்றெனையாண்டவுடையவருரைப்பவிறைஞ்சிநின்றெழிலநந்தாழ்வா
னன்றதுசெய்கதேவரீரேறாநற்றிருமலையிசைநாங்கள்
இன்றளவிருந்தபிழையெலாம்பொறுத்தியேறிலோமினியதில்யாருஞ்
சென்றுறமிகித்தற்கஞ்சுவர்நீயேசெறிந்திடாயெனிற்றிருமாலும். (ருஉங)

தொண்டரூடாடாத்தலத்தி.ரின்மாறன்றுகளறுஞ்சோடசகன்ம
மண்டரேசெயினுமவன்கடன்ஞாலத்தளிமிக்கவமலனென்றறைந்தார்
தெண்டிரைப்பொருநைத்திருக்குருகூரிற்றிருவவதரித்தசீமானார்
கண்டுகொணீயேயிறைவநானின்க்குக்கழறலென்னென்றுறக்கழற. (ருஉச)

திருவுளத்தந்தத்திறமெலாமுணர்ந்தெத்தேவருந்தொழுமெதிநாதன்
மருவிடவேண்டுமத்திருமலைமேன்மன்னுசீர்த்தொண்டரோடென்னப்
பொருவருஞானிபொருக்கெனவெழுந்துபுனிதநீராடியப்பொழுதே
யருமறைபுகழுந்துவாதெசநாமமணிந்தெழுந்தடிப்புளியடியில். (ருஉரு)

தெண்டனிட்டேறித்திருமலையாழ்வார்தம்மையுஞ்சென்றுறவணங்கிப்
புண்டரீகத்துட்டிருமகள்கொழுநன்பொருவரும்வைகுந்தநாதன்
றண்டுழாய்முடியான்பாதபீடத்திற்றடையறுபிரபத்திபண்ணிக்
கொண்டணைந்தார்களேறுதல்போலக்கோதறுவேங்கடப்பொருப்பில். (௫௨௬)

மன்னுசீரன்பிற்பிரபத்திபண்ணிமறுவறுமிராகவன்றுணையாய்
முன்னுதித்திட்டான்பின்மிதித்தேறிமொய்த்தசீர்த்திருமலைமீதே
பன்னருநெறியாய்க்கிடந்தநன்னிலையைப்பலமுறைகண்டுறவணங்கி
மின்னுநூன்மார்பன்சிந்தையுண்மகிழ்ந்துமெய்யெலாம்புளகம்வந்திளக. (௫௨௭)

வேறு.

ஒப்பார்மிக்காரில்லாதவுலகமுண்டபெருவாயன்
செப்பார்கருணைத்திண்வரையைத்திருந்தநோக்கிமனங்களித்திங்
கெப்பாலவருமனமருளுமெழிலார்மணிகள்பொருதுபுனல்
தப்பாதோடுங்கானாற்றைத்தமர்களோடுமுறநோக்கி. (௫௨௮)

வேறு.

ஆராதகாதலன்பினனனையபொற்குவடு?
நேராகவுறநோக்கிநிகரிறிருப்பரிவட்டச்
சீராரும்பாறையினிற்சென்றனனாங்கவர்செல்ல
வேராரும்பெரியதிருமலைநம்பியெனுந்தூயோன். (௫௨௯)

வேறு.

நாடிநான்முகனும்விடமிடற்றவனுநான்மறைமுனிவர்கள்குழுவும்
பாடிவானவரும்பணிசெயும்பரமன்பங்கயச்செல்வியோடிருந்து
சூடுநாண்மலரிற்கழித்ததும்விரும்பித்துய்த்ததிற்சேடமுந்தொண்டர்
தேடிநாண்மலரிட்டிறைஞ்சிநின்றேத்துந்திகழெதிராசனுக்கெதிரே. (௫௩0)

கொண்டுவேங்கடவன்குரைகழலிறைஞ்சிக்கோதிலான்புகுந்தனன்புகுதக்
கண்டவன்கழலின்மண்ணுறப்பணிந்துகாதலோடெழுந்தொருமருங்கி
லண்டருந்துதிப்பவெதிகளுக்கிறைவனின்றனனாசறுநம்பி
புண்டரீகக்கட்கருமுகிலளிப்பக்கொணர்ந்ததைப்புனிதனுக்களித்தார். (௫௩௧)

பின்னையும்வணங்கிமுந்தியிலர்தப்ரசாதங்களாயுளபுனிதந்
தன்னையுமேற்றுத்தொண்டரோபாதிதீனுமாங்கருந்தியேதவத்தி?
யென்னையோர்பொருட்டாற்றேவரீரதாகொண்டிடுவதேயாங்கொருசிறியோ
ரன்னையேயனையாயில்லைகொல்விடுதற்கென்றிவைநம்பியோடறைந்தான். ()

அப்படியிராமற்கிளையவன்பகரவாசறுநம்பியுமன்பர்
செப்பருமிந்தத்திருமலைமீதிற்செறிவனவீதிகள்பலவும்
தப்பறநோக்கிநாடினேன்சிறியோர்தமியனையனையராங்கில்லை
யொப்பிலாயென்றுனெதிகளுக்கிறைவனுருகிநைந்தங்ஙனேயொடுங்கி. (௫௩௩)

நின்றனன்பின்னுநம்பியைவணங்கிநகரில்கல்வேலியினருகே
சென்றனவளவிலர்ச்சகாதிதிகழ்திருத்தொண்டர்கள்பலரு
மன்றெதிர்கொண்டாங்கிறைஞ்சினரிறைஞ்சுமவரின்முனிவர்பணிந்தெழுந்தாங்
கொன்றியமகிழ்ச்சியுள்ளுறநிரைத்தாருத்தமக்குழாங்கடற்சூழ. (ருடச)

வேறு.

ஈசனருள்வைகுந்தநீள்வாசறனிலெய்தித்
தேசுபெறத்தெண்டனிட்டுத்திருக்கோனேரிக்கரையில்
ஆசிலாவன்பரொடுஞ்சென்றணைந்தாங்கதிலிறங்கி
வாசநறும்புனலாடிமன்னுதிருமண்காப்பும். (ருடரு)

வேறு.

சீர்பெறவணிந்துதிருமலைநம்பிதிருவடிமுடிமிசைதரித்தாங்
கார்வமிக்குடையதொண்டர்களோடுமணிமணித்தோரணங்களிற்றண்
டாரணிந்தமரர்தொழுந்திருவீதிநான்கினுந்தமரொடும்வலஞ்செய்
தோரணிசிந்தாமணிபகால்லைப்பகல்செயவிலங்குமாமாடம். (ருடசு)

அனைத்துநன்னுவிரத்தினமயத்தாற்றிகழ்வகையங்கணுனேக்கி
வினைத்தொகையறுத்தென்னுருயிர்காத்தான்விழிகளான்முகந்தனுடவித்து
நனைப்பெருவளப்பூமண்டபங்களையுநவையறவனுபவித்தாங்கே
நினைப்பருந்தேனேய்பூம்பொழிலென்றுநிகரிலாவமரர்களிறைஞ்சும். (ருடஎ)

வேறு.

தேனர்பூஞ்சோலையென்றுந்திருமொய்த்தசோலையென்று
மானுதென்றுங்கோற்றேன்பாய்ந்தழகார்குளிர்சோலைகளென்று
ஞானுவிதத்தாலாழ்வார்கணவிலும்பொழில்கள்பலபலவும்
தானுய்மன்னுந்தமர்களொடுந்தலைவனேக்கியனுபவித்தே. (ருடஅ)

திருப்பூமரங்கள்செண்பகங்கள்தொடக்கமாகச்செறிவ்தையும்
விருப்பமோடாங்குறநோக்கிவிமலனுறையும்வேங்கடத்திண்
பொருப்பின்மன்னுந்தெண்ணறுநற்பொருவில்சுனைகள்பலபலவும்
நெருப்பிற்செந்தீயொத்துமலர்நிகரில்சேருர்தாமரையும். (ருடக)

நோக்கிமகிழ்ந்தாங்கச்சுனையினுவலவினியதிருமொழியை
வாக்கிற்பயிற்றுங்குருகாதிமன்னும்பகையையிருதாளாற்
றாக்கிப்பறக்கும்பறவைகளைத்தமர்களோடுகண்டுவந்தான்
ஆக்கியுலகம்பதினுலுமாண்டானனுசனுயினுன். (ருச0)

வேறு.

ஆங்கதற்பின்றென்னுதெனுவென்னவளிமூரலும்
பாக்குறுநற்பாடலையுங்கேட்டுவந்துபயனறிய

வோங்குகிலம்கோட்டில்வைத்தவும்பனைச்சென்றடிவணங்கித்
தாங்குமவாவறச்சூழ்ந்தான்றிருவாசல்தனைவணங்கி. (௫௪௧)

மற்றதற்பினுள்புகுந்துமாசிலாவத்தாணி
நற்றவஞ்சேர்திருப்புளியைநன்றாகவிழுந்திறைஞ்சி
யுற்றறிவாற்சிபீடத்தடியணைந்தாங்குறவணங்கிக்
கற்றவரோடேயமுனைத்துறைவரர்தங்கழல்வணங்கி. (௫௪௨)

வேறு.

சீரார்திருச்சண்பகமன்னுந்திருவாசலிற்புக்குறவணங்கி
யோரார்சேனைமுதல்வனைச்சென்றிறைஞ்சித்திருவேங்கடத்தரியைத்
தாரார்மார்பனுறவணங்கித்தமர்கள்புகழத்தன்னாவி
நீராயுருகச்சென்றதற்பின்னிகரிலாதபலவளத்தால். (௫௪௩)

ஒப்பில்லாததிருமடைப்பள்ளிதன்னையுகந்திறைஞ்சிச்
செப்பமிக்கதிருமாமணிமண்டபத்தைச்சென்றிறைஞ்சி
அப்பன்றிருவேங்கடமுடையானலர்மேன்மங்கையுடனின்றாங்
தப்பாதுறையும்விமானத்தைத்தலையால்வணங்கிவலஞ்செய்தே. (௫௪௪)

உள்ளங்கரையவுள்புகுந்தன்றுலகமுண்டான்றனைநோக்கிப்
பள்ளமடையிலுடைபுனல்போற்பத்தியாயபேரன்பின்
வெள்ளமடுப்பவுடையவரும்விளங்குஞானபரவசராய்க்
கள்ளங்கடிந்தாருடன்வளருங்கருணைத்திருவேங்கடத்துறையும். (௫௪௫)

சீரார்நாற்றோளின்னமுதைச்சிவனுமயனுங்காணாத
காராரமுதேசெங்கனிவாய்க்கமலநயனக்கருமணியே
கூராராழிசங்கினையோர்கோவுக்களித்தகோவிந்தா
நாராயணனேயெவ்வுயிர்க்குஞானங்கொடுக்குநலஞ்சுடரே. (௫௪௬)

என்னவொழிவில்காலத்தையெடுத்துக்கூறியாங்கதற்பின்
மன்னுமுலகமுண்டபெருவாயான்றனையும்வழுத்தியதி
லன்னையலர்மேன்மங்கைதனைமுன்னிட்டடிக்கீழுறப்பணிந்து
தன்னையனையான்சரண்புக்குச்சாற்றுங்கமலமலரடிகள். (௫௪௭)

ஆதியாகச்செம்பொன்முடியளவுநோக்கியனுபவித்து
நீதிக்கடலாமுடையவருநின்றுகரைந்துநெக்குருகிப்
பேதியாததொண்டரொடும்பெற்றோமேயிப்பெரும்பேறென்
றோதிக்கண்கள்புனல்சொரியவுள்ளங்களிப்பவுகந்தாடி. (௫௪௮)

நாவாற்பாடிமனத்தாலேஞானச்சுடரையுள்ளிருத்திப்
பூவார்கழலைப்பின்னுமுறப்பொருந்தநோக்கிவிழுந்திறைஞ்சி
யோவாதன்பருடனெழுந்தாங்குருகிக்கசிந்தபேரன்பாற்
றேவாகாத்தியென்னுயிரைத்திருவேகாத்தியெனச்செப்பி. (௫௪௯)

நின்றுதிருமஞ்சனகாலங்கரிலமுதுசெய்கால
மன்றுசென்றதொண்டரொடுமாங்கேகூடியனுபவித்து
நன்றிசேருமனத்தினராய்ஞானமிக்வுமுடையவராய்
யொன்றுமிந்தப்படிமீதிலோங்குபரமபதமீதே. (௫௫0)

என்னமறைகளாழ்வார்களிசைத்தபடியேகண்டுய்ந்தேன்
மன்னும்விண்ணோர்வெற்பிதவாமதனுலிதனின்மன்னுமவ
ருன்னுநித்தர்முத்தரெனவுரைக்கும்வேதமதனுலே
துன்னுமழுக்குச்செடியாக்கைசுமந்துநாமுமீங்கிருத்தல். (௫௫௧)

தக்கதன்றென்றுடனிழியத்தலைவனினைந்தானதுகண்டு
தொக்கதொண்டர்க்கதிபதியாய்த்தோன்றித்துளங்காச்சுடர்விளக்கை
யொக்குநம்பியுடையவரைநோக்கியுவமையில்லாதாய்
மக்கள்தேவரெனினுமிந்தமாலையிறைஞ்சமன்னுமவர். (௫௫௨)

ஓதுந்திங்களொருமூன்றிங்குறைவர்முன்னைவிதியுமதாஞ்
சோதியானசுடரனையாயென்றுன்றுலங்குமெதிராசன்
நீதியுலதுநினையினுமங்நிலையினிறுத்தனின்கடனு
மாதிமாதாவப்படியேசெய்கின்றேனென்றவர்பகர்ந்தே. (௫௫௩)

தினங்கள்மூன்றுமலசலங்கள்விடலாகாமைசிந்தித்தே
யனங்கன்றிறலையறமாய்த்தானென்றுமமுதுசெய்யாதே
மனங்கொள்ஞானச்சுடர்விளக்காய்மன்னுதிருவேங்கடமுடையான்
இனங்களாயதொண்டரொடுமிருந்தானெதிகள்தனிநாதன். (௫௫௪)

வேறு.

ஆங்கதற்பின்னலாநாளன்பரொடுநம்பியொடு
மோங்குதிருவேங்கடத்துளும்புனையுந்துதித்தேத்திப்
பூங்கமலக்கழல்பணிந்துபொன்னாழிசங்கிறைவ
தாங்குதியென்றவர்க்களித்துத்தடிரோடும்விடைகொண்டே. (௫௫௫)

வேறு.

முருவருடியோத்தித்தசரதராமன்புராக்கதைதன்னைவான்மீகி
பொருவறவுரைத்தபடியெலாமடியேன்புந்தியினுணருமாறுரைத்தி
தருமுகில்வண்ணற்கினியதாதலவேயென்றிவைகட்டுரைத்திட்டுத்
திருமலைநம்பிதிருவடிதன்னைத்திருந்துறவிறைஞ்சிநின்றுரைப்ப. (௫௫௬)

வேறு.

ஒப்புவருமில்லாதம்பியர்தவுரைகேட்டாங்
கப்படியேசெய்கின்றேனனவர்தராளித்தபடி
இப்பொழுதேதிருப்பதியிவிழிந்தாங்கேசீயிருத்தி
யப்பதானத்தலத்தில்வருகின்றேனறவுமிக்காய். (௫௫௭)

### வேறு.

என்றுரைத்தருளவுடையவரந்தவிணையிலானிணையடியிறைஞ்சி
யொன்றியகருணைத்திருமலைமீதிலோங்குசீர்ச்சராசரங்களையு
நின்றுநின்றிறைஞ்சிச்சென்றுசென்றந்தநிகரில்கீழ்த்திருப்பதிதன்னி
லன்றுசென்றணைந்ததொண்டர்களோடுமொங்கிருந்தருளினரந்நாள். (௫௫௮)

### வேறு.

மற்றொருதினத்தினம்பிமாசிலானருகின்மன்னிக்
கொற்றவனயோத்திவேந்தன்குமரனாய்ப்பிறந்துதீவாய்ச்
சிற்றவைசொல்லைப்பேணுந்தேவனார்சரிதைமுன்னாட்
கற்றசீராளவந்தார்கட்டுரைத்திட்டவெல்லாம். (௫௫௯)

உடையவர்க்கருளிச்செய்தாருடையவரவற்றைமுற்றுந்
தடையறவுணர்ந்துநம்பிதாளிணைசார்வதாக
வடைவொடுவாழுநாளிலாங்கவர்தாளிற்பாங்கா
மடையொருகணமுமாறுப்பத்தியின்மன்னுவோராய். (௫௬௦)

ஓதுமாகமங்கண்முற்றுமுணர்ந்துமுன்னுமையோர்பாகன்
பாதமேதுணையாய்நாளும்பரிந்துகாளத்திதன்னிற்
கோதறமன்னுநாளிற்குருகைக்கோன்றிண்ணன்வீட்டில்
வேதசாரத்தைமேலோர்விளம்பிடவிரும்பிக்கேட்டே. (௫௬௧)

தம்பாலிருந்தசைவமதத்தலைமைதன்னையறவிட்டெ
னும்பாகாத்தியெனத்திருமாலோங்குஞ்சமயத்துள்புகுந்த
வம்பார்பொழில்சூழ்திருமலைநன்னம்பிக்குவந்தகுருமாறு
மெம்பாரென்னுந்திருநாமமுடையானொருவனிணையில்லான். (௫௬௨)

### வேறு.

ஆங்கவனம்பிகயிங்கரியங்களைத்துக்குமரியவனொருநாட்
பாங்குடனம்பிகண்வளர்ந்தருளும்படுக்கையைவிரித்ததன்மீதே
யேங்கிடாதேறிக்கண்வளர்ந்தனனவ்வியற்கையையெம்பெருமானார்
பூங்கமலச்சீர்க்கண்களானோக்கிப்புந்தியிற்பொருமிநின்றெனனே. (௫௬௩)

தேசிகன்றுயிலும்பூவணைமீதிற்செறிந்திவர்துயின்றனரிவர்தம்
மாசறுபரிமாற்றத்தினையென்னென்றறைகுவதினியெனவஞ்சி
மாசிலாநம்பியருகணைந்திறைஞ்சிமற்றவன்செய்தமையுரைத்தார்
ஈசனார்க்கினியநம்பியெம்பாரையீங்கழைவிரைவிலென்றிசைத்தார். (௫௬௪)

சென்றவரெம்பார்தமைக்கொணர்ந்தந்தத்தேசிகனிடத்தினில்விடுத்தா
ரன்றவனோடுநம்பியும்பகர்வானுசிலாக்கோவிந்தப்பெருமா
ளின்றெமக்கானுய்போலுரிமைந்தாயான்றுயில்படுக்கையிலேறி [ன்.
யொன்றுறத்துயின்றாயாங்கதிற்பயனென்பெற்றனையுரைத்திடென்றுரைத்தா

அத்திறஞ்செய்துநான்பெறுபலனுமருநரகென்றனனமலன்
இத்திறமறிந்திங்கிருந்தநீயதனையெதன்பொருட்டெண்ணியோசெய்தாய்
பொய்த்திறமில்லாயென்றனனெம்பார்பூவணைமீதினீயமர்ந்தான்
மெய்த்திறமுடையாயுறுத்துதலூர்தல்கடித்தலவ்விரோதிகளின்றி. (௫௬௬)

ஆசறநீயுந்துயின்றிடப்பெறுகிலடியனேன்றனக்கிருநரகங்
தேதிகாவமையுமென்றுநின்றெம்பார்செப்பிடவுடையவாதுகேட்
டீசனாளித்தவினைவிவற்கிருந்ததிறத்தினைநினைப்பரிதென்றார்
மாசிலாநம்பிதானுமவ்வுரையான்மைந்தனைமகிழ்ந்தெடுத்தணைத்தான். (௫௬௭)

வேறு.

ஈங்கிதோரதிகாரந்தானிருந்ததேயந்தோவென்னத்
தீங்கிலாயதிகளுதன்சிந்தையில்வியந்துபின்னு
நீங்கிடாதிருந்துநம்பிநினைவுறுபொருள்கண்முற்றும்
பாங்குறவுணர்ந்தவ்வூரிற்பல்பகலிருந்துவைகி. (௫௬௮)

திருமலைநம்பிசெய்யசேவடிமுடிமேற்சூடி
யொருபகற்றொண்டரோடுமுற்றுநின்றுகந்துநோக்கிக்
கருமுகில்வண்ணன்றங்குங்கடிபொழிலரங்கந்தன்னின்
மருவிடவேண்டுமீதிவிடையெனவணங்கிநின்றார். (௫௬௯)

நன்றெனநம்பியந்தநவையிலான்றன்னையின்றே
சென்றுவாழ்ந்திடுகமைந்தாதிருவரங்கத்தினின்பா
லொன்றுநானல்கப்பெற்றேமில்லையென்றுருகிநைந்தா
ரன்றதுகேட்டுநின்றவன்பனுமருளிச்செய்வான். (௫௭௦)

நீசனேற்கொன்றுநல்கநினைவுளதாகிலெந்தா
யாசிலாவெம்பார்தம்மையருளுதியடியேற்கென்றார்
தேசிகர்திலகமாயதிருமலைநம்பியந்த
மாசிலான்கையைப்பற்றிவழங்கினான்கொடுபோவென்றான். (௫௭௧)

வேறு.

உடையவருமெம்பாருமோங்குசீர்முதலிகளு
மடைவினொடுநம்பிதமையகங்குழையவிழுந்திறைஞ்சி
விடையென்னவவர்போதிவித்தகனேயெனவுரைப்பப்
புடைமருவுந்தொண்டரொடும்புகழ்க்காஞ்சிநகர்புக்கார். (௫௭௨)

வேறு.

அத்திருப்பதியிற்பேரருளாளர்தம்மையுமாசிலாநிலைசேர்
மெய்த்தவமுடையதிருக்கச்சிநம்பிதன்னையும்விழுந்துறவணங்கி
யுத்தமகுணத்தான்விடையெனப்பகர்ந்தாங்கோங்குசீரங்கமாநகரிற்
பத்தர்க்கெதிப்பயிபுகுந்தனரலர்ந்தபங்கயக்கண்ணனுக்கினியார். (௫௭௩)

அப்படிபுகுந்தவன்பனையரங்ககருணைமுதலிகள்யாருந்
தப்பறவணங்கவவர்கள்சேவடியிற்றாழ்ந்துறவிறைஞ்சிநம்பெருமா
ளொப்பருங்கமலமலரடியிறைஞ்சிநின்றனனுவமையொன்றில்லான்
செப்பருந்தொண்டர்பலரொடுமெதிகடலைவனைத்திருவினாயகனார். (௫௭௪)

வம்பவிழ்கமலக்கண்களானோக்கிமாசிலாவெதிகணாயகனே
நம்பெருவடக்குவீடணைந்திறைஞ்சிநண்ணினைகொல்லெனநயத்தாற்
செம்பவளத்தண்வாயினால்வினவத்தேவர்கடேவபொய்ப்பாவை
யின்புறவாட்டுமியந்திரிசீநானியந்திரமெனவிசைந்தமையால். (௫௭௫)

என்செயலுளவோயிறைவநீயிசைவித்திட்டனபடியெலாம்பெற்றே
னஞ்சினுங்கொடியவைம்புலன்களையுநவையொடுநாடொறுமருவும்
வஞ்சநெஞ்சினையுமனதுபேரருளில்வைத்தநின்செயலலாதுரைக்கிற் [தான்.
பொன்செய்நீண்முடியாய்பின்னுமோர்செயல்களுளதுகொல்புகலெனப்பணிந்

வேறு.

அப்படிநிகழுநாளிலகளங்கநாடாள்வானுஞ்
செப்பமார்நீதிமன்னன்றிருவுறையூரின்மன்னித்
தப்பறவாழவன்றான்றனக்குறுங்கண்ணாய்ச்சேவித்
தொப்பறமன்னும்பிள்ளையுறங்காதவில்லிதாசர். (௫௭௭)

மருமக்களாகியுள்ளார்வண்டருஞ்சொண்டர்தாமு
மொருவர்க்கேயொருவரொப்பாரன்றியொப்பொருவரில்லா
விருவர்க்குமன்னன்றன்பாற்சேவகமிடுவித்தாங்கோர்
திருவொக்குங்கன்னிதன்பாற்சென்றனனசிந்தையோடும். (௫௭௮)

மன்னுவாரவர்க்குமந்தமைந்தர்க்குமாதந்தோறுஞ்
சொன்னமாயிரங்கள்கைக்குமெய்க்குமோர்துகளிலாதீர்
முன்னமேபெறுமென்றீயமுறையினிற்பெற்றுக்கூறு
மன்னமென்னடையாள்கண்ணிலகப்பட்டமுதிர்ச்சியாலே, (௫௭௯)

மன்னரிடத்துமமரிடத்துமற்றுந்தொழில்கள்பயிலிடத்தும்
மின்னினிடையாளுடன்செறிந்துமீள்வார்பிள்ளையதிலொருநா
ளன்னந்திகழுமுறையூர்நின்றுசிலாதவெள்ளறைக்குக்
கன்னங்கரியகுழலியொடுங்கதிரோன்மதியங்காண்பளவில். (௫௮௦)

போனார்பொன்னரிதிமணலிற்பொருந்துஞ்சூடுபொறாதந்த
மானார்விழியாளடிகன்றமாதின்றலைவனதைநோக்கித்
தானுங்குடுத்ததுகில்போட்டுத்தையனடப்பாயிதிலென்னத்
தேனார்குழலாளினடந்துசென்றாளதனைத்திருக்கண்ணால், (௫௮௧)

மன்னுமரங்கத்தினிதமருமாசிலாதவெதிராசன்
பொன்னிநடுவிற்புனலாடப்புகுந்தானந்தப்புதுமையினைப்
பன்னுந்தொண்டர்தமைநோக்கிப்பரிவானோக்கியிதுகாண்மி
னென்னப்பிள்ளையுறங்காதவில்லிதாசரியற்கையினை. (௫௮௨)

காட்டித்தாநீராடாதேகன்னிதனையக்காதலனுங்
கூட்டியருகில்வருமளவுங்குறித்துநின்றுவாருமென
நீட்டிக்கூவியவரணையநெடுமாலடியாரொடுமவரை
வீட்டின்மூட்டவேண்டுமெனவெண்ணிவிறல்கொள்வேலோனே. (௫௮௩)

வேறு.

ஆங்குநீயுடுத்ததுகிலினைக்கழித்திவ்வாயிழைபடியிட்க்கொடுத்தா
யெங்குமற்றிவளும்பொடிச்சுடநீயின்றிடுதுகின்மிசையடியிட்டா
ளோங்கியகுணத்தாயெங்குளாயென்றாருடையவர்பிள்ளையுமருளைத்
தாங்கியவெதிகடலைவனேயெம்மூர்தக்கசீர்வெள்ளறையாகும். (௫௮௪)

என்றுரைத்திடலுமத்திறங்கேட்டவிராமனுக்கிளையவனிப்போ
தென்றிசைநின்றுவருவதேனென்னச்சேவகன்றிகழுறையூரி
லொன்றுமன்னவனுக்காங்கவன்றன்னைப்பணிந்தெமதூர்புகும்வண்ண
மின்றியானணைந்தேனென்றனனிறைவனிவளுடன்வருவதென்னென்றான் ()

வேறு.

மண்ணழகுபெறப்பிறந்துமறையனைத்துமுணர்ந்தாயிப்
பெண்ணழகுபெரிதெனினும்பேதையேன்பிறைநுதலி
கண்ணழகிலகப்பட்டுக்கணமுமகலேனென்றான்
விண்ணழகுபெறவிலங்கையொன்னலரைவென்கண்டான். (௫௮௬)

வேறு.

அருளிச்செய்வானிவள்கண்ணிலழகார்கண்கள்கண்டிடிவிம்
மருளிற்படிந்தசிந்தனைநோய்மாறுமோசொல்சொல்லென்னச்
சுருளுற்றிருண்டகனங்குழலாள்விழியிற்றுவக்கைத்துடைப்பதற்கோர்
பொருண்மற்றுலகில்யாங்காணேனென்றார்பிள்ளைபூதூரில். (௫[illegible]௭)

வந்தான்காட்டுகின்றேனான்வருதியென்னவுடன்கொடுபோய்
இந்தாகாண்டியெனவரங்கரிணையிலிணைத்தாமரைக்கண்ணைச்
சிந்தாவறிவின்மெய்ஞ்ஞானிதிருந்தக்காட்டக்கண்டிறைஞ்சி
யந்தோவிதனுக்கவள்கண்களிணையாங்கொல்லென்றகங்குழைந்தே (௫௮௮)

பெரியவாயகண்களெனைப்பேதஞ்செய்ததெனமுன்னம்
விரியும்பொழில்சூழுறையூரில்விமலன்பகர்ந்தபடிபிள்ளை

கரியகுழலாள்விழியழகிற்கலந்தவாசையனைத்தினையும்
திரியமீட்டுத்தென்னரங்கன்றிருக்கண்ணழகிற்செயலழிந்தார். (ருஅகூ)

### வேறு.

அப்படிநின்றுசெயலழிந்துருகுமன்பனையுடையவர்நோக்கி
யெப்படியந்தமடக்கொடிகண்ணேவிவர்நயனங்களோவழகிற்
செப்புதிசிறப்பின்மிக்கதென்றுரைப்பத்தேவனார்திருநயனத்துக்
கொப்பதோபீளைசாறியகண்களும்பனேயெனப்பிள்ளையுரைத்தே. (ருகூ0)

உடையவரடியிற்சென்றுறவணங்கியுத்தமவெனையங்கீகரித்தி
தடையறவென்னநின்றுறவிரப்பச்சாற்றியவெதிகணாயகனு
மடைவுறுமாதுதன்னொடுமிருத்தியணியரங்கத்திலப்படியே
கொடைநிகழ்கரத்தாயெம்மொடுங்கூட்டிக்கொள்ளுதுமின்றெனக்கூறி. (ருகூக)

மடத்தினிற்கொடுபோயாங்கவர்தமக்குமாதினல்லாளுக்குமுடனே
திடத்தொடும்விளங்கும்திருவிலச்சினையுஞ்சேர்பெறவளித்துயிர்க்குறவாம்
படத்தரவணையான்ஹயத்தையுங்கொடுத்துப்பண்டுபோலரசனைச்சேவித்
திடக்கடவாய்நீதடக்கைவாளேந்தியென்றனனிதற்கென்னுளிசைக்கேன். ()

### வேறு.

முன்னமடித்துப்பறித்திட்டமுதல்வன்கலியன்றிருமுன்பே
மன்னுகமலமணவாளன்வந்துதோன்றியுறநோக்கி
யின்னுமடித்துப்பறியென்னவிசைத்தானவனுக்கிவனுமொரு
பின்னமில்லாப்பின்னாகிப்பிறந்தானென்றாற்பேசானே. (ருகூ௩)

அப்படியருளிச்செய்தாங்கத்திருநகரிலின்றே
செப்பருமடமொன்றாக்கிச்சேயிழையாளையாங்குத்
தப்பறநிறுத்திநீயும்மன்னவன்சரணந்தாழ்ந்தங்
கொப்பருநிலையாய்வாழ்தியெனவுரைத்துகந்தானெந்தை. (ருகூ௪)

ஆசிலாததேசிகனாருளிச்செய்தபடிபிள்ளை
தேசுபொலிந்ததிருவரங்கத்திருந்துதிருந்தத்திறன்மன்ன
னேசமழுந்தச்சேவித்துநினைவைமுற்றுமெதிராசன்
வாசக்கமலமலரடிக்கேமன்னவைத்துவைகினரால். (ருகூ௫)

(தொடரும்.)

உதவிப்பத்திராதிபர்.

உ

# தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு.

தமிழ் லெக்ஸிகனுபீஸ் உதவிப்பதிப்பாசிரியர்

ப்ருஹ்மஸ்ரீ P. S. சுப்பிரமணியசாஸ்திரி (M.A., L.T.,) அவர்கள்

எழுதுவது.

—

[ ௬௫0-ஆம்பக்கத் தொடர்ச்சி ].

157-வது சூத்திரம். தெரிபுவேறு நிலையலுங் குறிப்பிற் றோன்றலு
மிருபாற் றென்ப பொருண்மை நிலையே.

இச்சூத்திரத்திற்குப் பதவுரைகூறுமிடத்து மூன்று உரைகாரர்களும் ஒரேவிதமாகக் கூறியுள்ளனர். தாற்பரியார்த்தங் கூறுமிடத்து, 'குறிப்பிற்றோன்றல்' என்பதற்குச் சேனாவரையர் சந்தருப்பத்தினாலும், இலக்ஷணாவிருத்தியாலும், வியஞ்சனாவிருத்தியாலும் தோன்றுதல் என்று பொருள்கொண்டதாகத் தோன்றுகிறது. நச்சினார்க்கினியரோ சேனாவரையர் கூறுகின்ற மற்றவற்றை உடன்பட்டுச் செய்யுளில்வரும் வியஞ்சனாவிருத்திமாத்திரம் இச்சூத்திரத்துக்கு விஷயமல்லவென்று மறுக்கின்றார். அம்மறுப்பில் அவர் கூறியுள்ள காரணம் முழுதும் பொருந்துமாவென்று ஆராயத்தக்கது.

161-வது சூத்திரம். இருதிணைப் பிரிந்த வைம்பாற் கிளவிக்கு
முரியவை யுரிய பெயர்வயி னான

இச்சூத்திரத்தின் பொருள்:—

சேனாவரையர்:—இருதிணைப்பிரிந்த ஐம்பாற்கிளவியாதற்குப் பெயருள் உரியன உரியவாம்.

நச்சினார்க்கினியர்:—ஒருபாற்பெயரிடத்து முடிபாக வந்த வினைகள் இருதிணையினின்றும் பிரிந்த ஐம்பாற்பொருட்கும் தனித்தனி கூறாமல் தானே சென்று உணர்த்தற்கு உரியன உரியனவாம்.

இப்போது பதிப்பித்திருக்கும் இளம்பூரணத்தில் உள்ள உரை சேனாவரையத்தில் முற்பகுதியிலுள்ளவாறே காணப்படுகின்றது. ஆனால், சேனாவரையர் உரையை நன்கு நோக்குமிடத்து 'நஞ்சுண்டான் சாம் என்பது ஒருபாற்குரிய சொல்லாயினும், நஞ்சுண்டாள் சாம், நஞ்சுண்டார் சாவர், நஞ்சுண்டது சாம், நஞ்சுண்டன சாம் என ஏனைப் பாற்கு முரித்தாம் அச்சொல்லென இப்பொருண்மை யுணர்த்துகின்றது இச்சூத்திரம்' என்பதற் கேற்கவே இளம்பூரணத்திற் பொருள் இருக்க வேண்டுமென்பது பெறப்படும். அவ்வாறாயின் உரையாசிரியர்மதமும் நச்சினார்க்கினியர்மதமும் ஒன்றே.

நச்சினார்க்கினியர்கூறிய உரையிற்கண்ட வினைகள் என்னும் பதம் சூத்திரத்தில் இல்லை. அவர் வருவித்துக்கொண்டுள்ளார். கிளவி என்பதற்குப் பொருள் என்று பொருள்கொண்டார். சந்தருப்பத்தைநோக்கின் வினைகளைப்பற்றி இங்குக் கூறவேண்டுவதில்லை. முற்சூத்திரத்திற் பெயர் உயர்திணைக்கும், அஃறிணைக்கும், அவ்விருதிணைக்கும் உரிய என்றும், கிளவியாக்கம் 5-வது சூத்திரம் முதல் 9-வது சூத்திரம்முடிய னஃகானொற்று முதலாயின பாலைத்தெரிவிக்குங் கிளவிகள் என்றும், 11-வது சூத்திரத்தில் "வினையிற் றோன்றும் பாலறி கிளவியும்-பெயரிற் றோன்றும் பாலறி கிளவியும்-மயங்கல்கூடா" என்றும் கூறியிருத்தலால், வினையிற்போலப் பெயரிலும் அக்கிளவிகள் நியதியாய் அதே பாலையே உணர்த்துமோ வென்று ஆசங்கைதோன்ற, அவ்வாறு பெயரில் நியதி இல்லை என்பதற்கே இச்சூத்திரம் ஆசிரியாற் கூறப்பட்டிருக்கலாம்.

ஆனால், 'ஆசிரியர் வினைச்சொல்லை ஈற்றான் அடங்குமென்று கருதி ஈறுபற்றி ஓதிப் பெயர்ச்சொல்லை ஈற்றான் அடங்காது பல்வேறுவகையவாய் வருமென்று கருதிச் சொல்லாகத் தனித்தனியே எடுத்தோதினாராதலின்' சேனாவரையர் இச்சூத்திரத்திற்குக் கொள்ளும்பொருள் அச்சூத்திரங்களாலேயே ஊகிக்கப்பெறுவதால், அப்பொருள் கொள்ளாது வேறுபொருளை நச்சினார்க்கினியர் கூறுகின்றார். அவ்வாறு ஊகிக்கப்

பெறுமாயினும் அவ்விஷயத்தைத் தெளிவாய் ஆசிரியர் கூறுவது குற்ற மாகாதாகையாலும், நச்சினார்க்கினியர் கூறும் பொருள் சந்தருப்பத்துக் குப் பொருந்தாமையாலும் சேனாவரையர்கூறியுள்ளபொருளே ஏற்றதா மென்பது என்கருத்து.

'ஒருபாற் கிளவி யேனைப்பாற் கண்ணும் – வருவன தானே வழக் கென மொழிப' (பொருளியல் 28) என்னுஞ் சூத்திரத்திற்குச் சேனா வரையர்போலப் பொதுவாகவே நச்சினார்க்கினியரும் பொருள்கூறவேண் டும். அதனாற் பெறப்படும் பொருள் 'ஒத்த கிழவனுங் கிழத்தியும்' என்ற களவியற்சூத்திரத்திற்' பன்மைகூறு வழுவை அமைத்தல்' என்று நச்சினார்க்கினியர் கூறியபோதிலும், 'நஞ்சுண்டான்சாம் என்பது ஒரு பாற்குரிய சொல்லாயினும், நஞ்சுண்டாள் சாம், நஞ்சுண்டார் சாவர், நஞ் சுண்டது சாம், நஞ்சுண்டன சாம் என ஏனைப்பாற்குமுரித்தாம் அச் சொல்' என்பதையுங் கொள்ளுவதற்கு ஆக்ஷேபம் ஒன்றையுங் காணோம்.

அவ்வழி,
அவனிவ னுவனென வரூஉம் பெயரும்
162-வது ..............................
சூத்திரம். யான்யாம் நாமென வரூஉம் பெயரும்
..............................
பாலறி வந்த வுயர்திணைப் பெயரே.

இச்சூத்திரவுரையில் யாமென்பது படர்க்கையுளப்பாட்டுத் தன் மைப்பெயர் என்றும், நாமென்பது முன்னிலையுளப்பாட்டுத் தன்மைப் பெயர் என்றும் நச்சினார்க்கினியர் கூறுவது நோக்கத்தக்கது. இவ்வாறு ஆசிரியர் தொல்காப்பியனாராலும், உரையாசிரியர், சேனாவரையர் இவ் விருவர்களாலும் கூறப்பட்டதாகத் தெரியவில்லை. நச்சினார்க்கினியர் காலத்தில் இவ்வாறு வழங்கிற்றுப்போலும்.

ஆண்மை யடுத்த மகனென் கிளவியும்
163-வது ..............................
சூத்திரம். அமைமரபு லாகிய பெண்டென் கிளவியும்
..............................
அப்பதி னைந்து மவற்றோ ரன்ன.

இச்சூத்திரவுரையில் அவைமுதலாகிய பெண்டென்கிளவி என்பதற்கு உதாரணமாக, உரையாசிரியர் அப்பெண்டு இப்பெண்டு உப்பெண்டு இவற்றைக் கூறியுள்ளார். சேனாவரையர் 'பெண்டென் கிளவி இக்காலத்து விழுந்தனபோலும்' என்றார். நச்சினார்க்கினியர் உரையாசிரியர்கூறிய உதாரணங்களையே கூறி "அப்பெண்டென்னுஞ்சுட்டு, 'கடிசொல்லில்லை' (தொல். சொல். 452) என்பதனாற் பெண்டென நின்றது" என்றார். ஆகையால், தொல்காப்பியர்காலத்தில் 'பெண்டு' என்பது சுட்டோடு தான் வழங்கிற்று என்பது திண்ணம்.

பெண்டென்கிளவி என்பதற்குப் பாடாந்தரமாகப் பெண்டன்கிளவி என்று ஓதுவாருமுளர் என்று சேனாவரையர் கூறியுள்ளார். நச்சினார்க்கினியர் "ஊரார் பெண்டெனமொழிப', 'என்னைநின்—பெண்டெனப் பிறர் கூறும் பழிமாறப் பெறுகற்பின்' எனச் சான்றோர் கூறலிற் பெண்டென்பதே பாடம்" என்றார்.

எல்லாரு மென்னும் பெயர்நிலைக் கிளவியும்

164-வது ..............................................................

சூத்திரம். பெண்மை யடுத்த மகனென் கிளவியும்

..............................................................

இச்சூத்திரவுரையிற் சேனாவரையர் 'மாறோகத்தார் இக்காலத்தும் பெண்மகனென்று வழங்குப' என்றார். கூத்தர் தம்மூலாவிற் பெண் சக்கரவர்த்தி யென்று கூறியிருப்பதும் மலையாளத்தில் இப்போதும் பெண்ணரசு என்று வழங்குவதும் இங்கு ஒப்பிடத்தக்கன. நச்சினார்க்கினியர் 'பெண்மகனென்பது அத்தன்மையாரை அக்காலம் அவ்வாறே வழங்கினாரயிற்று' என்றார். ஆதலால் நச்சினார்க்கினியர்காலத்தில் அவ்வழக்கு இறந்துவிட்டதுபோலும்.

நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே

..............................................................

165-வது பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயரே

சூத்திரம். ..............................................................

இன்றிவ ரென்னு மெண்ணியற் பெயரோ

டன்றி யனைத்து மவற்றியல் பினவே

இச்சூத்திரவுரையில் உரையாசிரியர், சேனாவரையர், இவ்விருவரும் 'பார்ப்பார், அரசர், வணிகர், வேளாளர்' என்பனவற்றைப் பல்லோர்க் குறித்த திணைநிலைப்பெயருக்கு உதாரணமாகக் கூறினர். நச்சினார்க் கினியர் அவற்றைக் குடிப்பெயருக்கே உதாரணமாகக் கூறினர்.

சூத்திரத்தில் 'இன்றிவர், என்னுஞ் சொல் மிகையென்றுகருதி உரையாசிரியரும், சேனாவரையரும் 'இன்றிவர்' என்பது இத்துணைவர் என்னும் பொருட்டுப்போலும்' என்று கூறினர்.

குழுவின்பெயருக்கு உதாரணமாக நச்சினார்க்கினியர் வணிகக் கிராமத்தார் என்பதைக் கூறியுள்ளார். அதேமொழிதான் சாஸனங் களில் மணிக்கிராமத்தார் என்று மாறுபட்டுக் காணப்படுகின்றது என்பது சிலர் கருத்து.

166-வது சூத்திரம்.

அன்ன பிறவு முயர்திணை மருங்கிற்
பன்மையு மொருமையும் பாலறி வந்த
வென்ன பெயரு மத்திணை யவ்வே.

பாடபேதம்:—தாமோதரம்பிள்ளையவர்கள்பதிப்பில் 'முப்பாலறி வந்தவென்னாது' என்று பாடம் உளது. சைவசித்தாந்தக்கழகப்பதிப் பில் 'பாலறிவந்த வென்னாது' என்ற பாடம் சூத்திரவுரையிலும், 'முப் பாலறிவந்தவென்னாது' என்ற பாடம் கீழ்க்குறிப்பிலும் காணப்படு கின்றன. பாலறிவந்தவென்னாது என்னும் பாடமே மேலானது என்னலாம்.

173 வது சூத்திரம்.

நிகழூஉ நின்ற பலர்வரை கிளவியி
னுயர்திணை யொருமை தோன்றலு முரித்தே
யன்ன மரபின் வினைவயி னான.

இச்சூத்திரவுரையிற் சேனாவரையர் 'பலர்வரைகிளவி யென்றது 'பல்லோர் படர்க்கை செய்யுமென்னுமுற்றுச்சொல்லை' என்றார். இது, 'பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை—யவ்வயின் மூன்று நிகழுங் காலத்துச்—செய்யு மென்னுங் கிளவியொடு கொள்ளா' (தொல். சொல். 237) என்னுஞ் சூத்திரத்தால் இனிது விளங்கும்.

முன்சூத்திரத்தில் (தொல். சொல். 172) விரவுப்பெயர் ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின்பால் இவற்றைக் குறிப்பதென்பது அதையடுத்த வினையின்விகுதியால் அறியப்படுமென்பதும், இச் சூத்திரத்தில் அதன்பின்வரும் வினைப் பகுதியால் அறியப்படும் என்பதும் உணர்த்தப்பட்டுள்ளன.

பாடபேதம்:—இளம்பூரணப்பதிப்பிலும், நச்சினார்க்கினியப்பதிப் பிலும் பலர்வரைகிளவி யென்பதற்குப் பிரதியாக பால்வரைகிளவி என்ற பாடம் உளது. 'பல்லோர் படர்க்கை......' (தொல் சொல். 227) என்னுஞ் சூத்திரத்தை நோக்குமிடத்துச் சேனாவரையர்பாடமே தக்க தெனத் தோன்றும்.

174-வது சூத்திரம். இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயரே ..............................................................

இச்சூத்திரவுரையில் 'பிறவுமென்றதனான், மக, குழவி போல்வன கொள்க. இவற்றை உயர்திணைப்பெயரென்றாரால் உரையாசிரியர் எனின் ..............................அவை விரவுப் பெயரேயாம், அதனான் அது போலியுரை யென்க' என்று சேனாவரையர் கூறுகின்றனர். இப்போது பதிப்பித்திருக்கும் இளம்பூரணத்தில் "அன்ன பிறவும் என்பதனால் மக, குழவி என்பனவுங் கொள்க. 'குழவியு மகவு மாயிரண் டல்லன— கிழவ வல்ல மக்கட் கண்ணே' (தொல். மரபியல். 23.) என்று உயர் திணைக்கும் எய்துவித்தார்" என்ற வாக்கியந்தான் உளது. இவ்வாறே உரையாசிரியர் கூறியிருப்பின் சேனாவரையரின் மறுப்புப் பொருந்தாது. சேனாவரையத்திற்கண்டவாறே உரையாசிரியர் கூறியிருப்பின், இளம்பூர ணத்திற்கண்ட 'அன்ன பிறவும்......................எய்துவித்தார்' என்ற பாடம் மாறுபாடாக வந்திருக்கவேண்டும்.

சேனாவரையர் நிமித்தம் என்றசொல்லை வடமொழியில் பிரவிருத்தி நிமித்தம் ([1]ப்ரவ்ருத்திநிமித்தம்) என்பதின் பொருளிற் கூறியுள்ளார். ஆதலால் பெருங்காலன் முதலிய விரவுப்பெயர்களில் நிமித்தம் ஒன்றாத லால் அவை பலபொருளொருசொல்லல்ல என்று சேனாவரையர் கூறினர்.

---

1 பெருங்காலன் என்பதற்குப் பெருங்காலையுடைத்தாயிருக்குந்தன்மை என்பதே பிரவிருத்திநிமித்தம். ஆதலால் அச்சொல் உயர்திணையைக் குறித்த போதிலும் அஃறிணையைக் குறித்தபோதிலும் அதன் நிமித்தம் ஒன்றே.

182-வது சூத்திரம்.

பன்மை சுட்டிய வெல்லாப் பெயரு
மொன்றே பலவே யொருவ ரென்னு
மென்றிப் பாற்கு மோரன் னவ்வே.

இச்சூத்திரவுரையிற் சேனாவரையர் [2]இயைபின்மை நீக்கலும் [3]பிறிதினியைபுநீக்கலுமென விசேடித்தல் இருவகைத்து.....................பன்மை சுட்டிய பெயரென்பது வெண்குடைப் பெருவிறல் என்பதுபோல ஒருமையியைபு நீக்காது பன்மை சுட்டுதலோடு இயைபின்மைமாத்திரை நீக்கிப் பன்மை சுட்டுமென்பதுபட நின்றது! என்று கூறியுள்ளார். இவ்வாறே நச்சினார்க்கினியரும் கூறியுள்ளார். இவ்விருவரையும் நன்னூல் விருத்தியுரைகாரர் 'ஒன்றே யிருதிணைத் தன்பா லேற்கும்' (நன்-284) என்னுஞ் சூத்திரவுரையில் மறுத்துப் பன்மைசுட்டியபெயரென்றது பலபாலையுஞ் சுட்டிநிற்றலிற் பிறிதினியைபு நீக்கிய விசேடணம் என்று கூறியுள்ளார். ஆனால், தொல்காப்பியத்தில் 'பெண்மை யியற்பெய ராண்மை யியற்பெயர்-பன்மை யியற்பெய ரொருமை யியற்பெயரென்—றந்நான் கென்ப வியற்பெயர் நிலையே' (சொல். 176) முதலிய மூன்று சூத்திரங்களை நோக்குமிடத்து ஆண்மையியற்பெயர், பெண்மையியற்பெயர், பன்மையியற்பெயர், ஒருமையியற்பெயர் என்பனவற்றிற்கு ஆண்மையைக்குறிக்கத் தகுதியுள்ள இயற்பெயர், பெண்மையைக் குறிக்கத் தகுதியுள்ள இயற்பெயர், பன்மையைக்குறிக்கத் தகுதியுள்ள இயற்பெயர், ஒருமையைக் குறிக்கத்தகுதியுள்ள இயற்பெயர் என்றே பொருள்கொள்வது எளிதாயிருக்குமென்று தோன்றுகின்றது. அவ்வாறு கொள்ளின் சேனாவரையர் கூற்றில் யாதொருகுற்றமுமில்லை. ஆண்மையியற்பெயர், பெண்மையியற்பெயர், ஒருமையியற்பெயர் இம்மூன்றுக்கும் அவ்வாறுபொருள் கொண்டு பன்மையியற்பெயருக்குமாத்திரம் பல பாலையுஞ்சுட்டிநிற்கும் இயற்பெயர் என்று மாறுபட்டுப் பொருள்கொள்வதில் மிக்க பயனைக் காணோம். பன்மை என்னுஞ்சொல்லுக்கு இடுகுறிகாரணப்பொருளை விட்டுக் காரணப்பெயரைக்கொள்ளுவதிற் கௌரவமும் உண்டு. மேலும்,

---

[2] இயைபின்மைநீக்கல் என்பது அயோகவ்யவச்சேதம் (அயோக வ்யவச்சேதம்) என்பதன் மொழிபெயர்ப்பு.

[3] பிறிதினியைபுநீக்கல் என்பது அந்யயோகவ்யவச்சேதம் (அன்னிய யோக வியவச்சேதம்) என்பதன் மொழிபெயர்ப்பு.

எல்லாவிடத்திலும் விசேடணம் பிறிதினியைபையே நீக்குகின்றதாலும், இயைபின்மையையே நீக்காததாலும் இவ்விடத்திலும் பிறிதினியை பையே நீக்கவேண்டும் என்று கூறக்கூடுமாயின் விருத்தியுரைகாரர் கூறு மாறே ஒருவாறு கூறலாம். ஆனால், அவரே 'செஞ்ஞாயிறு' முதலிய வற்றில் தன்னியைபின்மைநீக்கலைக் கூறியுள்ளார். ஆகையால், சேனா வரையர்கூற்றே ஆசிரியர் தொல்காப்பியனார் சூத்திரித்தவகைக்குப் பொருந்தும்.

நச்சினார்க்கினியத்தில் இச்சூத்திரவுரையிறுதியிலுள்ள 'எனவே விசேடித்தல் இருவகைபவாயின........................சேனாவரையர்க்குங் கருத்தாயிற்று' என்ற சொற்றொடர் நன்னூல் விருத்தியுரை படித்த மாணவனால் ஏட்டிற் சேர்க்கப்பட்டிருக்கவேண்டுமென்று தோன்று கின்றது. இச்சொற்றொடரிற் 'பலபால்களையும்' என்றவிடத்துப் 'பன்மைப்பாலை' என்றிருப்பின் பொருளமைதிக்குப் பொருந்தும்.

187-வது சூத்திரம்.
தன்னு ளுறுத்த பன்மைக் கல்ல
துயர்திணை மருங்கி னாக்க மில்லை.

இச்சூத்திரவுரையிற் சேனாவரையர் "எல்லாப் பார்ப்பாரும், எல்லாச் சான்றோரும் எனப் படர்க்கைக்கண் வருதலும் கோடற்குத் 'தன்னு ளுறுத்த பன்மைக்காங்கால் உயர்திணை மருங்கினல்ல தாகா'தென மொழி மாற்றியுரைத்தாரால் உரையாசிரியரெனின்..........அது போலியுரை யென்க" என்றார். இப்போது பதிப்பித்திருக்கும் இளம்பூரணத்தில் உள்ள இச்சூத்திரத்தின் பொருளும் சேனாவரையர் கொடுத்துள்ள பொருளும் ஒன்றாயிருப்பதால் இம்மறுப்புக்கு இடம் இல்லை.

பெயரியல் முற்றிற்று

[தொடரும்.]

# கம்பராமாயண இன்கவித்திரட்டு

[௬௮௨-ம் பக்கத்தொடர்ச்சி]

**சூர்ப்பநகை தன்னை உறுப்பறையாக்கியவர் ஊரும் பேரும் உரைத்தல்.**

["அவர்கள் அயோத்திமாநகருக்கரசனான தசாதசக்கரவர்த்தியின் தனயர். அவனுடைய ஆணைப்படி அரணியவாசம் செய்கின்றார். இராமன் இலக்குமணன் என்னும் பெயரினர்" என்றாள்.

அவள் இவ்வாறு கூறியதைக் கேட்ட இராவணன், "தன் அருமையான தங்கை மூக்கை அரிந்தவர்கள் அற்ப மனுடர். அவர்கள் அரியப் புகுந்தபோதே கொல்லப்பட்டிலரேனும் அரிந்தபின்னும் கொல்லுண்ணுதுயிரோ டிருக்கின்றார்கள்! அவர்களை உயிர்வாழவிட்டு அணுவளவும் வெட்கமில்லாமல் (அவரைக் கொல்லாது தன்னையுங் கொல்லாது வாளா இருக்கின்ற) வாளாயுதத்தோடு உயிரைவைத்துக்கொண்டு இராவணன் இன்னமும் இறவாதிருக்கின்றான்! திக்குவிசயஞ்செய்து திரிலோகாதிபனதன் பலன் இதுதானோ! இறவாத புகழ் இறத்தலுற்றேன்! அகில உலகவீரர் தலைகளனைத்தையும் அரிந்தாலும், அரிந்தநாசி பொருந்தாது. போன மானம் மீளாது! மனமே! மாளாத வன்பழி வந்ததென்று வருந்தாதே. அப்பழி சுமக்க இத்தலைகள் பத்திருக்கின்றன. அன்றி இருபது தோள்களும் இருக்கின்றன." என்று கூறிச் சீறிச் சினச்சிரிப்புச்சிரித்துத் தீ எழ விழித்து "எளிய முனிவரன்றி வலிய துணையொருவரேனுமில்லாத இருவரேயான சிறிய மனிதரைக் கரன் முதலிய கணக்கற்ற இராக்கதரெவரும் கொன்றிலரா?" என்றான்.

**இராவணன் வினவும் தன் விடையும் இயைந்து
நாடகநிகழ்ச்சிபோல்வதாகச், சூர்ப்பநகை
கரன் முதலியோர் கொல்லப்பட்டமை கூறல்.**

எனவே, சூர்ப்பநகை, சோகமிகுந்து, பூமியில் விழுந்து, கண்ணீர் சொரிந்து, கதறி அழுது "கரன் முதலியோர், இக்கதி அடைந்த என்னைநோக்கி 'இப்படிச் செய்தவர் எவர்?' என, யான் இன்னாரென்ற

வுடனே, சேனை முழுவதையும் திரட்டிக்கொண்டு சென்றார்கள். எல்லா ரும் இராமனுடைய ஒரேவில்லால் மூன்றே நாழிகையில் மடிந்தார்கள்" என்றாள்.

இராவணன் ஏககாலத்தில் சோபமும் கோபமும் எய்துதல்.

தம்பியர் மூவரும் தானைகள் யாவையும் தனிமனிதனாற் சாத லுற்றாரென்ற சொல் செவிகளுட் செல்லுமுன், மேககாலத்தினின்று ஏககாலத்தில் மின்னும் மழையும் வெளிப்படல்போல, இராவணனது இருபது கண்வரிசைகள் நெருப்பையும் நீரையும் சொரிந்தன (கோபத்தை யும் கண்ணீரையும் வெளிப்படுத்தின என்றபடி).

அப்போது, நெருப்புக்கு நெய்போலக் கோபத்துக்குச் சோகம் துணைசெய்ய, இராவணன், சூர்ப்பநகையைநோக்கி "அவர்கள் உன்னை உறுப்பரிய, நீ இழைத்த பிழை என்?" என்றான்.]

விடைவிறுத்தல் வியாசமாகச் சூர்ப்பநகை இராவணனுக்கு மோகமுளச் சீதையழகை வருணித்தல்.

393. "என்வயின் உற்ற குற்றம், யாவர்க்கும் எழுதொணாத
தன்மையன் இராமனோடும் தாமரை தவிரப் போந்தாள், [ள்
மின்வயின்மருங்குல்கொண்டாள்,வெய்வயின்மென்றோள்கொண்டா
பொன்வயின்மேனிகொண்டாள்பொருட்டினாற்புகுந்த" தென்றாள்.

இ-ள். "(நான் நன்மையேசெய்யக் கருதினேன். குற்றஞ்செய்தே னல்லேன். நிரபராதியான என்பாற் குற்றம் சம்பவித்தது எப்படி யென்றால்,) என்னிடத்திற் சம்பவித்த குற்றம், தாமரை மலர் (ஆதன மாகத் தான் வீற்றிருக்கப் பெற்ற பாக்கியத்தை) நீங்(கி இழக்)க (அதனை அகன்று) இராமனுடன் வந்தவளும் மின்னினிடத்திருந்து இடை (யினது நுடக்கத்தைக்) கொண்டவளும் மூங்கிலினிடத்திருந்து மெல்லிய தோள் (வடிவத்தை) வாங்கியவளும் பொன்னினிடத்திருந்து மேனி (யின்நிறத்தைப்) பெற்றவளும் ஆனவிள் (ஒருத்தி) காரணமாகச் சம்பவித்தது" என்று (விடை) கூறினாள்.

வயின் - இடம். உற்ற - சம்பவித்த - நேர்ந்த. யாவர்க்கும் - யாவரானும்; உருபுமயக்கம். எழுதல் - (சித்திரத்தில்) எழுதல் - சித் திரித்தல். எழுதொணாத தன்மையன் - சித்திரத்தில் எழுதுதற்கரிய

(வடிவழுடைய) வன். தன்மை - குணம்; உருவின் குணமான அழகைக்குறித்தது. வேய் - மூங்கில். பொருட்டு - காரணம். புகுந்தது - சம்பவித்தது. எழுத ஒண்ணுத என்பது எழுதொணுதவென்பதன் விகாரம்; அகரம் தொக்கது.

புகுந்தது என்பதற்கு "(நான்) அருகிற்சென்ற மாத்திரமேயாம்" என்பதும், "'எழுதொணுத தன்மையள்' என்று பாடமோதி இதனையும் பிராட்டிக்கு அடைமொழியாக்குவாரும் உளர்" என்பதும் மூந்திய உரை. இதன்பின் 'தெவ்வுலகத்தும்' என்ற பாட்டில் 'பாவர்க்கு மெழுதொணுதாள்' என்பது வருதலால் 'எழுதொணுத தன்மையள்' என்ற பாடம் பொருந்தாதது.

394. "ஆர் அவள்?" என்னலோடும், அரக்கியும், "ஐய ஆழித்
தேர் அவள் அல்குல், கொங்கை செம்பொன்செய் குலிகச் செப்புப்,
பார் அவள் பாதம் தீண்டப் பாக்கியம் படைத்த தம்மா!
பேர் அவள் சீதை" என்று வடிவெலாம் பேச லுற்றுள்.

இ - ள். (அது கேட்டு இராவணன் சூர்ப்பநகையை நோக்கி) "அவள் ஆர்?" என்ற அளவிலே, சூர்ப்பநகை, "அவளுடைய அல்குல் தேர் (போலும்), கொங்கைகள் சிவந்த அழகுசெய்கின்ற சாதிலிங்கத்திஞற் செய்த செப்புக்கள் (ஒக்கும்), (சாதாரணமான தெய்வப்பெண்களின்பாதத்தைதயே தீண்டப்பெருத) பூமி (அவரெல்லாரினுஞ் சிறந்த) அவள் பாதங்கள் பரிசிக்கப் பாக்கியம் படைத்தது ஆச்சரியம்! அவள் பேர் சீதை" என்று சொல்லி அவளுடைய அழகனைத்தையும் எடுத்துச் சொல்லத்தொடங்கினுள்.

ஐய - ஐயனே; அழகுடைய என்ற பொருள்கொண்டு தேருக்கு அடைமொழியாக்கலுமாம். ஆழி - தேர் உருளை. பொன் - அழகு. குலிகம் இங்குலிகம் என்பதன் விகாரம். இங்குலிகம் - சாதிலிங்கம். அம்மா ஓர் அதிசயச்சொல். செய்யுளாதலால், 'அவள் பேர்' 'பேர் அவள்' என மாறிநின்றது.

செம்பொன்செய் குலிகச் செப்பு என்பதற்குச் "செம்பொன்ஞற் செய்த கலசங்களும் சூதிலியத்தாலாகிய சிமிழ்களும் என்பது மூந்திய உரை. செம்பொன் குலிகம் செய் செப்பு எனக் கொண்டுகூட்டிச் செம்

பொன்னாலும் குலிகத்தாலும் செய்த செப்புக்கள் என்றும் பொருள் கொள்ளலாம். 'ஆழ்ந்து தேர் அவள் திரண்ட கொங்கை' யென்பதும் பாடம். இப்பாடத்தில் ஆழ்ந்து தேர் என்பதற்கு நான் சொல்வதை ஊன்றி ஆராய்ந்தறிவாயாக என்பது பொருள்.

இக்கவியின் மூன்றும் அடி வள்ளிநாயகியின் "அடி தோய்தலிற் பூமகள் போக்கரும்பே றுடையாள்" எனத் தணிகைப்புராணத்தில் வருவதை நினைவுறச்செய்கின்றது.

சூர்ப்பநகை, இராவணனுக்குக் காமமூட்டுதற்குப் பூர்வபீடிகையாக இதற்கு முந்திய பாட்டிற் சீதையினது சில அங்கங்களின் அழகைச் சிறப்பித்துரைத்தாள். அதனால், அவள், இராவணனுக்குச் சீதையைப்பற்றிய விவரமறியவேண்டுமென்ற சித்தத்தை உண்டாக்குவதிற் சித்திபெற்றமையை, அவன் 'ஆர் அவள்?' என்றதனால், அறிந்து, சித்திக்குமேற் சித்திபெறுவாளாய், அவனுக்குக் காமம் விளைக்கும் அங்கங்களை இந்தப் பாட்டில், வருணித்தாளென்க. இவ் வருணனையால் அவன் காமபரவசனாண குறிப்பறிந்து அப் பாவசம் அதிகமும் உறுதியும் ஆகுதல் கருதிச் சீதையின் அழகைப் பின்வருகின்ற அருமையும் இனிமையுமான ஐபிருகவிகளிற் பலபடப்புனைந்து பாராட்டுகின்றாள்.

395. "காமரம் முரலும் பாடல் கள் எனக் கனிந்த இன் சொற்
றேமலர் நிரந்த கூந்தற் றேவர்க்கும் அணங்காம் என்னத்,
தாமரை இருந்த தையல் சேடி ஆம் தரமும் அல்லள்.
யாம் உரை வழங்கும் என்ப தேழைமைப் பால தன்றோ?"

இ-ள். "வண்டுகள் இசைக்கும் பாட்டும், தேனும்போல முதிர்ந்த மாதுரியமான வார்த்தைகளையும் வாசனைபொருந்திய மலர்கள் நிறைந்த கூந்தலையுமுடைய (மனிதமாந்தர்க்குத் தேவமாதர் அழகிற் சிறத்தல் போல, இலக்குமியை உள்ளிட்ட) தேவமாதர்க்கும் (அழகிற்சிறந்த ஓர்) தேவமாதென்னும்படி, இலக்குமிதேவி (அவளுக்கு ஒப்பாகாளென்பானேன்,) தாதியாகவுந் தகுதியாகாள் (ஆக உள்ளா ளென்றால்,) நாம் (அவளுடைய அழகை) விரித்துரைப்போமென்பது அறியாமையின் பாற்படுவதல்லவா?"

காமரம் - வண்டு. முரலும் - ஒலிக்கும். கள் - தேன். கனிந்த - முதிர்ந்த (தமிழ்முகராதி). தேம் - வாசனை ; தேன். நிரத்தல் - நிறைதல். ஆண்பாற்கும் பெண்பாற்கும் பொதுவான 'தேவர்' இங்கே பெண்பாலை உணர்த்திநின்றது. அணங்கு என்பதற்கு மனிதரைக் "காமநெறியால் வருத்திக் கொல்லுந் தெய்வமகள்" என்ற பொருளுண்மையால், 'தேவர்க்கும் அணங்கு' என்றதனால், மனிதரை மட்டுமன்றித் தேவரையும் காம நெறியால் வருத்தும் தெய்வமகள்போல்வா ளென்று ளெனலுமாம். தாமரை இருந்த தையல் - தாமரைமலரில் வாழும் இலக்குமி. சேடி - தோழி ; ஏவல்செய்வாள். சேடி ஆம் தாரமும் அல்லள் என்பதில் உள்ள உம்மையைப் பிரித்துக் கூட்டிச் சேடியாகவும் தாரம் (உடையவள்) அல்லளென்று பொருள் செய்யப்பட்டது. வழங்குதும் (—வழங்குவோம்—சொல்வோம்) என்பது வழங்குமெனத் தொகுத்தல் விகாரமாயிற்று. "தொகுத்தலும் வரும் செய்புள் வேண்டுழி" (நன்னூல் கருரு).

"தேவமாதர் யாவர்க்கும் தலைவியாய்ச் சிறக்கிற திருமகள் அவளுக்குத் தாதியாகத் தகுதியுடையவளுமாகாதபோது நான் அவள் அழகை எப்படிச் சொல்லிமுடிப்பேன்? என்று அக் கட்டழகின் கூறற் கருமையை விளக்குகிறாள் ; ஆயினும், இயன்ற அளவு சொல்வேனென்ற வாறு. இங்குக் கூறப்படும் சீதை வர்ணனையாகிய பிரபந்தத்துக்கு இது அவையடக்கமாய் அமைந்தது. அங்ஙனமாகவே, யாம் எனக் கவி களுக்குரிய இயற்கைத் தனித்தன்மைப் பன்மையாற் கூறினாள். எவ ராலுஞ் சொல்லலாகாதென்பதுபட 'யாம்' என உளப்பாட்டுத்தன்மைப் பன்மை கூறினளுமாம்."

சீதையின் அழகைச் சிந்திக்கச் சிந்திக்க அதன் சிறப்பு மேலும் மேலும் மிகுதியாகச் சூர்ப்பநகைக்குத் தோன்றியதென்பது, அவள் முதற்கட் சீதையைக் கண்ணுற்றபோது 'திரு இங்குவருவாள்கொல்லோ?' என்று சீதையைத் திருமகளோடு ஒப்புமையுடையாளாகவும், சற்றுமுன் 'தாமரை தவிரப்போந்தாள்' என்று திருமகளேயாகவும், இப்போது 'சேடியாந்தாரமுமல்லள்' என்று திருமகளினும் உயர்ந்தாளாகவும் கூறினமையால் விளங்குதல் காண்க.

396. "மஞ்சொக்கும் அளக ஓதி, மழை ஒக்கும் வடித்த கூந்தல்,
பஞ்சொக்கும் அடிகள், செய்ய பவளத்தின் விரல்கள் ஐய,
அஞ்சொற்கள் அமுதின் அள்ளிக் கொண்டவள், வதனம் மைதீர்
கஞ்சத்தின் அளவிற் றேனும் கடலினும் பெரிய கண்கள்."

இ-ள். "(அவளுடைய, கட்டி) முடித்த தலைமயிர் (மழை பொழியத்திரண்ட) மேகம் நேரும். (அவிழ்த்து) வார்ந்து தாழவிட்ட (அந்தத்) தலைமயிர் அவ்வாறு தொங்கவிட்ட நிலைமையில், (மழைபெய்யக் காலிறங்கிய அந்த) மேகம் போலும். பாதங்கள் பஞ்சுநிகரும். விரல்கள் சிவந்த பவளத்தின் அழகினையுடையன. அழகிய சொற்களை அமுதத்தினின்று வாரிக்கொண்டவள் (சொற்கள் அமுதமொக்கு மென்றபடி) முகம் குற்றமற்ற தாமரைமலரின் அளவினையுடைய (தாய்ச் சிறிய) தாயினும் (அந்த முகத்துக்குள் அமைந்த) கண்கள் (வியாபகத்தில்) கடலைக் காட்டிலும் பெரியவைகள்.

மஞ்சும் மழையும் மேகம். அளகம் - ஐந்துவகையாகமுடிக்கப் பட்ட பெண்கள் தலைமயிர் முடிவகைகளுள் ஒன்று.

ஓதியும் கூந்தலும் பெண்டிர்தலைமயிர். வடித்தல் வடிதலின் பிறவினை. வடிதல் - வார்தல் - ஒழுகுதல். ஐ - அழகு. ஐய - அழகையுடையன. மை - குற்றம். தீர்தல் - நீங்குதல். அளவிற்று - அளவினையுடையது.

'விரல்கள் பவளத்தின் ஐய' என மாற்றிப் பொருள் கூறப்பட்டது. 'பவளத்தின் விரல்கள் ஐய' என இருக்கிறபடியே வைத்துப் பவளம் போல விரல்கள் அழகையுடையன என்றும் பொருள் கொள்ளலாம், ஐய என்பதற்கு ஐயனே என்பது மூந்திய உரை. 'அளக ஓதி' யென்றதனால் முடித்தகூந்தலும், 'வடித்தகூந்த' லென்றதனால் அவிழ்த்த கூந்தலும் குறிப்பிக்கப்பட்டன.

கூந்தல் சாதாரணமாக முடிக்கப்பட்டும் ஏகதேசமாக (ஈரம் புலர்த்தல் முதலிய ஏதுக்களால்) அவிழ்த்துவிடப்பட்டுமிருக்கும். சாதாரண நிலையை முதற்கண் மனத்திட்கொண்டு முடித்த கூந்தல் மஞ்சொக்கு மென்றும், ஏகதேசநிலையைப் பின்பு எண்ணி வடித்தகூந்தல் மழை

யொக்குமென்றுங் கூறினாள். இதனால் மழைபெய்யத் திரண்டமேகத்தை மஞ்சென்பதனாலும் மழைபொழிதற்குக் காலிறங்கிய மேகத்தை மழையென்பதனாலுங் குறிப்பித்தா ளென்னலாம்.

"சேற்றில் உண்டாதலும், சூரியனைக்கண்டவளவிலே மலர்தலும், அவனைக் காணாதவிடத்துக் குவிதலும், பனி மழைகளுக்கு அழிதலும், வரவரப் பரிமளம் ஒழிதலும், அடியில் முள்ளுடைமையும் முதலிய பல குற்றங் குறைகள் தாமரைக்கு உள்ளனவாதலால், அவையனைத்தும் இல்லாததொரு தாமரையே அவள் முகத்துக்கு ஈடாகுமென்றற்கு, 'மைதீர் கஞ்சம்' என்றாள்.

கண்களுக்கு இருப்பிடமான முகம் தாமரைமலரின் அளவினதாய்ச் சிறியதாயினும் அச் சிறு முகத்தில் அடங்கிய கண்கள் எவ்வாறு கடலினும் பெரியவையாமென்பதை முந்திய உரைகாரர் விளக்காதுபோயினர். கண்கள் இருக்குமிடம் சிறியதாயினும் வியாபிக்குமிடம் மிகவும் பெரியதென்பதை உய்த்துணரவைப்பாளாய்த் தன் உள்ளத்துள்ள பொருள் புலப்படுமுன் திகைப்பும், புலப்பட்டபின் வியப்பும் விளையக் 'கடலினும் பெரிய' என்றாள் என்க. வண்டுகள் பாடும் (மலர் மாலையணிந்த) கூந்தல் (உடையவளது) களிப்புடைய கண்கள் (தடைபடாது) சென்று உலாவுதற்கு எட்டுத்திசைகளுக்கும் இடம்போதாது என்னும் பொருள் உள்ள "வண்டிசைக்கும் கூந்தல் மதர்விழிகள் சென்றுலவ—எண்டிசைக்கும் காணாதிடம்" என்பது இப்பொருள்கோட்கு ஆதாரமாம். இதனைச் சீதை "கருதி மாதிரம் அனைத்தையும் அளக்கின்ற கண்ணாள்" எனக் காட்சிப்படலத்தில் வருவது வலியுறுத்துதல் காண்க.

397. "ஈசனார் கண்ணின் வெந்தா னென்னுமி திழுதைச் சொல், இவ்
வாசமலா ளேதி யாளைக் கண்டன, வல்ல ஆற்றால்
பேசலாம் தகைமைத் தல்லாப் பெரும்பிணி பிணிப்ப, நீண்ட
ஆசையால் அழிந்து தேய்ந்தான், அநங்கன் அவ் வுருவம் அம்மா!"

இ - ள். "(இப்போது உருவிலான் ஆக உள்ள) மன்மதன் சிவபிரானது (நெற்றிக்) கண்ணி (ன் நெருப்பி) னால் (முன்னிருந்த உருவம்) எரிந்தொழிந்தானென்பது பொய்வார்த்தையே. (அவன்) இந்த வாசம்

வீசும் கூந்தலினளைக் கண்டு (வாக்கு வல்லார் சொல்ல) வல்ல விதங்களாற் சொல்லக்கூடிய தன்மையுடையதல்லாத பெரியதோர்நோய் (தன்னை) வருந்தச் செய்யும்படி (அவள் மீது கொண்ட) மிகுதியான ஆசையால் அந்த உருவம் (படிப்படியாகத்) தேய்ந்து அழிந்தொழிந்தான்."

ஈசனார் என்பதில் ஆர் உயர்வுப்பன்மை விகுதி. என்னும் இது— என்று சொல்லும் இது—என்பது. இழுதை - பொய். என்னுமிழுதைச்சொல் - என்பதாகிய இச்சொல் பொய்ச்சொல். என்னுமிழுதைச்சொல்லால் என்பதும் பாடம். நாறுதல் - மணத்தல். ஓதி பெண்கள் தலைமயிர். "வினைமுற்றே வினையெச்சம் ஆக" லென்றதனால் கண்டனன் என்பது கண்டு என்னும் வினையெச்சப்பொருள்பட நின்றது. ஆறு - விதம். பேசலாம் - பேசக்கூடிய. தகைமை - தன்மை தகைமைத்து - தன்மையுடையது. பிணி - நோய். பிணிப்ப - வருத்த. 'கொண்டிமகளிரைப் பான்மையிற் பிணித்துப் படிற்றுரை அடக்குதல்' என மணிமேகலையில் வருதல் காண்க. அழிந்து தேய்ந்தான் என்பதை விகுதிபிரித்துக்கூட்டி இடமாற்றித் தேய்ந்தழிந்தா னென்று கொள்க.

பிணியின் வன்மையை உணர்த்தப் பேசலாகாப் பிணியென்று சுருங்கச்சொல்லி யமையாது 'பேசலாந் தகைமைத் தல்லாப் பெரும் பிணி' யென நீட்டி வளர்த்துச் சூர்ப்பநகை சொல்லியது, அவள் தன்னைப்போல இராவணனும் அப்பிணியின் வன்மையை, அந் நெடுஞ்சொற்றொடர் சொல்லப்பட்டு முடிவுறும்வரையும், அவகாசமாக நெடிது நினைந்து நெஞ்சழுந்த நன்குணர்தற்பொருட்டுச் சொல்லியதாம்.

"மன்மதன் அநங்கனானதற்குக் காரணம், சிவபிரானது நெற்றிக் கண்ணின் நெருப்புக்கு இரையானதன்று; இவளழகில் ஈடுபட்டு மிக்க காமநோயுற்று அதனாலேயே உடம்பு மெலிந்தொழிந்தவாறும் என்றாள். இங்ஙனம் உண்மையானதன்மையை நீக்கி மற்றொரு தன்மையையேற்றிக் கூறியது, ஒழிப்பணியாம்; வடநூலார் அபநுதியலங்கார மென்பர். 'சிறப்பினும் பொருளினும் குணத்தினும் உண்மை, மறுத்துப் பிறிதுரைப்ப தவநுதி யாகும்' என இதனிலக்கணங் காண்க. இதனைத் தற்குறிப்பேற்றத்தில் அடக்கலுமாம்."

398. "தெவ்வுல கத்தும் காண்டி, சிரத்தினில் பணத்தினோர்கள்
அவ்வுல கத்தும் காண்டி, அலைகடல் உலகிற் காண்டி ;
வெவ்வுலை உற்ற வேலை வாளினை வென்ற கண்ணாள்,
இவ்வுல கத்தாள் ; அங்கம் யாவர்க்கும் எழுதொ ணாதாள்."

இ-ள். "(அளவற்ற அழகிய பெண்களுள்ளே இவள்போலும் எழிலுடையா ளெவளேனு மிருக்கின்றாளா வென்று) தேவலோகத்திலே (சென்று தேடிப்) பார், (அவ்வாறே) நாகலோகத்திலும் பூலோகத்திலும் பார் (எங்கும் இப்படிப்பட்டவள் கிடையாது). (ஆடவரது நெஞ்சூடுருவப் பாய்தலில்) வேலையும் (அவர்கள் நெஞ்சைப் பிளத்தலில்) வாளையும் வெற்றிகொண்ட கண்ணுடையாள் (ஆன இவள், மேற்கூறிய மூன்றுலகங்களுள்ளே 'பார், அவள்பாதம் தீண்டப் பாக்கியம் படைத்ததம்மா!' என்று நான் முன்னம் சொன்னபடி) இந்தப்பூமியில் இருப்பவள். (என்றாலும், இவ் வுலகத்திலும் வேறெவ்வுலகத்திலும் உள்ள பிற பெண்கள் வடிவம் சித்திரத்தில் எழுதமுடிவதுபோல, இவள்) வடிவம் (சித்திரகலைஞர்) எவராலும் சித்திரிக்கமுடியாத (சிறந்த அழகுடைய)வள் (என்ற உண்மையை நான் கூறியவாறு நீ மூன்றுலகத்தும் போய்ப் பார்த்தபின்பு தெரிந்துகொள்வாய்)".

தெவ் - சத்துரு. தெவ்வுலகம் - (இராவணனுக்குப்) பகைவருலகம் (ஆகிய தேவலோகம்). பணம் - படம். பணத்தினோர் - படத்தையுடையோர் (ஆன நாகர்). நாகர்களைச் 'சிரத்தினிற் பணத்தினோர்கள்' என ஒருவகைச் சுவைபடச் சொல்லிய நயம் காண்க. நாகர் வாழ்கின்ற தூரத்துள்ள உலகமெனச் சுட்டுதற்கு அவ்வுலகமென்றாள். (அலைகள்) அலை (கின்ற) கடல் (சூழ்ந்த) உலகு-பூமி. வெம் உலை - வெவ்விய (கொல்லன்) உலை. உருக்கு, வேல்வடிவமும் வாள்வடிவமுமாகக் காய்ச்சி அடித்து ஆக்கப்படுதற்காக, உலையில் உறுதல்பற்றி உலை உற்ற வேல் வாள்களென்றாள். யாவர்க்கும் - யாவராலும்; உருபுமயக்கம். எழுதல் - சித்திரித்தல்.

சூர்ப்பநகை, முன் இராமனை 'யாவர்க்கும் எழுதொணாத தன்மையன்' என்றது, இப்போது சீதையை 'யாவர்க்கும் எழுதொணாதாள்' என்றது, அவள் இராம சீதையரை முதற்கட் பார்த்தபோது 'இரு

திறத்தார்க்குஞ் செய்த வரம்பில ரிருவர்' என்றதனோடு பொருத்தமா யிருத்தல் காண்க.

399. "தோளையே சொல்லு கேனோ, சுடர்முகத் துலவு கின்ற
வாளையே சொல்லு கேனோ, அல்லவை வழுத்து கேனோ,
மீளவும் திகைப்ப தல்லால் தனித்தனி விளம்பல் ஆற்றேன்:
நாளையே காண்டி அன்றே, நான் உனக் குரைப்ப தென்னோ?"

இ-ள். "(நான் அவள் உறுப்புக்களின் அழகை எடுத்துச் சொல்லத்தொடங்கும்போது, தோள்கள் என் மனக்கண் ணெதிரே தோன்றுகின்றன. அவற்றை வருணிக்கலாமென்றெண்ணும்போது, கண்கள் சிறப்பாகத் தோன்றுகின்றன. அவற்றை வருணிக்க எண்ணும் போது, மற்றை உறுப்புக்கள் ஒன்றன்பின் னொன்றாகச் சிறந்தனவாகத் தோன்றுகின்றன. இதனால் யான் அவள்) தோளழகைச் சொல்வேனோ கண்ணழகைச் சொல்வேனோ, இவை யல்லாத உறுப்புக்களின் அழகைச் சொல்வேனோ, (எதனைச் சொல்வதென்று முதலில் திகைத்ததுபோலத் திரும்பவும்) திரும்பவுந் திகைப்பதல்லாமல் (ஓர் உறுப்பின் பின் ஓர் உறுப்பாகத்) தனித்தனியாகச் சொல்ல வல்லேனல்லேன். நீ நாளைத் தினமே (அவளைப்) பார்த்திடுவாயல்லவா, (அப்போது எல்லா உறுப்புக் களின் அழகையும் நேராகத் தெரிந்துகொள்வாய். அப்படித் தெரிந்து கொள்ளப்போகிற) உனக்கு நான் சொல் (ல வேண்டு) வது யாது (இருக் கின்றது? ஒன்றும் இல்லை)."

சுடர் - ஒளி. சுடர்தல் - ஒளிசெய்தல். சுடர்முகம் - ஒளியை யுடைய முகம்; ஒளிசெய்கின்ற முகம். முகத்து உலவுகின்றவாள் - கண். அல்லவை - அல்லாதவை - தோளும் கண்ணு மல்லாத அவய வங்கள். அல்லவை சந்தியால் வல்லவையென எழுதப்பட்டிருத்தல்பற்றி வல்லவை யென்றே கொண்டு அதற்குச் (சொல்ல) வல்லவையான அவய வங்களை யென்றும் பொருள் கூறுவர். அன்றி, வல்-சூதாடுகருவி, அவை பகுதிப்பொருள் விகுதி, வல் உவமையாகுபெயராய்க் கொங்கையைக் குறித்ததென்றும் உரை கூறுவர். வழுத்துதல் - சொல்லுதல். ஆற் றேன் - வல்லேனல்லேன். ஆற்றார் - வலியில்லார் (புறநானூறு). அல்குலை வழுத்துகேனோ என்பதும் பாடம்.

"பிரத்தியக்ஷமாகப் பார்த்தாற் பார்த்ததேயன்றி வருணித்துச் சொல்லி யுணர்த்தற்கு முடியாதது அவளழகு என்றவாறு."

"தான் அவளழகை இவ்வளவு எடுத்துக்கூறியமாத்திரத்தால் காமுகனான இராவணன் அவளிடங் காதல்கொண்டு உடனே அவளை நாடிச் சென்றிடுவானென்ற நிச்சயத்தால் 'காளையே காண்டி யன்றே' என்றாள்."

ஒருபாட்டுக்கு முக்கியமானதாய் மருடம்போலுள்ள கருத்தைப் பெரும்பான்மையாக இறுதியடியில் அமையப் பாடும் கவித்துவ முறையைக் கையாண்டியற்றிய கவிகளுள்ளே சிறந்த ஒன்றாக உள்ளது இக் கவி. இதனில் 'காளையே காண்டி' என்ற பகுதி, சூர்ப்பநகை சொல் வன்மையால் இராவணன்மனத்தில் எழுப்பிய காமம் உச்சநிலையை அடைய நெருங்குலுற்ற சமயத்தை அறிந்து அந் நிலையை விரைவி லடைந்துவிடும்படி மிக்க திறமையோடு விளம்பியது; இனிச் சொல்வன வெல்லாம் அந்நிலையில் அவன் மனத்தை உறைப்பிக்கச் சொல்வனவேயா மென்னும்படி யுள்ளது.

400"வில்லொக்கும் நுதலென் றாலும், வேல்லொக்கும் விழியென் றாலும்,
பல்லொக்கும் முத்தென் றாலும், பவளத்தை இதழென் றாலும்,
சொல்லொக்கும்; பொருள் ஒவ்வாதால்: சொல்லலாம் உவமை உண்டோ?
நெல்லொக்கும் புல்லென் றாலும் நேர்உரைத் தாக வற்றே."

இ-ள். "(உலகத்திலே உண்மையாக உள்ளவற்றுள்ளே, சொற்களும் உள்ளன; சொற்கள் குறிக்கும் பொருள்களும் உள்ளன: அப்படிப் பட்ட சொற்கள் பொருள்களுள்ளே உவமான உவமேயச் சொற்களும் பொருள்களும் அடங்கியுவை. ஆக, அவள்) புருவததை வில்லொக்கு மென்றாலும் கண்ணை வேலொக்குமென்றாலும் பல்லை முத்தொக்குமென் றாலும் இதழைப் பவளம் (ஒக்கும்) என்றாலும் (சொற்களுக்குச்) சொற்கள் ஒக்கும் (அன்றிப் பொருள்களுக்குப்) பொருள்கள் ஒப்பாக பாட்டா. [ அதாவது-(அந்த வில் வேல் முத்துப் பவளம் என்ற உவ மானச்) சொற்கள் (புருவம் கண் பல் இதழ் என்ற உவமேயச்சொற்களை) ஒக்கும்; (அம்மட்டேயல்லாமல், வில் முதலியவை குறித்த உவமானப்) பொருள்கள் (புருவமுதலியவை குறித்த உவமேயப் பொருள்களுக்கு)

ஒப்பாகமாட்டா.—என்றபடி] (சொல்லொத்துப் பொருளொவ்வாத மேற்கூறிய உவமானங்களன்றிப் பொருளும் ஒப்பாகச்) சொல்லக்கூடிய உவமானங்க ளுண்டோ? (இல்லை). (மேலேகூறியவாறு புருவம் முதலியவைகளை வில் முதலியவை பொக்குமென்பது நெல்லைப் புல்லொக்குமென்பது போலாம். புருவமுதலியவைகளை வில்முதலியவை யொக்குமென்றாலும்) நெல்லைப் புல்லொக்குமென்றாலும் (தோற்றத்தில் ஒப்புக்கூறியதாமேயன்றி உண்மையில்) ஒப்புக்கூறியதாகமாட்டாது."

நுதல்—(1) புருவம்; (2) நெற்றி. இவ்விரண்டவயவங்களும் விற்போல் வளைவாயிருத்தலால் நுதலென்ற சொல்லுக்கு இருபொருள்களில் எதுவும் இங்கே பொருந்தும். முதலடிப்போக்குக்கு இயைய, இரண்டாம் அடியில் 'பல்லொக்கும் முத்தென்றாலும்' என்பதை மாற்றி முத்து ஒக்கும் பல்லை, என்றாலுமென்றும், 'பவளத்தை இதழ் என்றாலும்' என்பதில் உருபுபிரித்துக்கூட்டி ஒக்கும் என்ற சொல் வருவித்துப் பவளம் இதழை ஒக்குமென்றாலுமென்றும் கொள்ளல்வேண்டும். ஓ, எதிர்மறைப்பொருள் குறித்த வினாவிடைச்சொல். நேர் உவமை. உரைத்தது உரைத்து என விகாரப்பட்டுநின்றது. "தொகுத்தலும் வரும் செய்யுள் வேண்டுழி" (நன்னூல்-கருரு). வளர்த்தது என்பது வளர்த்து என "நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால்" (நீதிநெறிவிளக்கம்) என்பதில் வருதலும், நிறைந்தது நிறைந்து என 'ஊருணி நீர் நிறைந்தற்றே' என்ற குறளில் வருதலும் காண்க. வற்று - வல்லது. ஏ எதிர்மறை வற்றே - வல்லாது - மாட்டாது. வற்றோ என்ற பாடங்கொண்டால், அதனில் உள்ள ஓவையும் மூன்றும் அடியில் உள்ள ஓவைப் போல எதிர்மறை வினாவிடைச்சொல்லாகக் கொள்க.

'நேர் உரைத்தாகவற்றே' என்பதை 'நேர் உரைத் (த) து ஆக அற்றே' எனக்கொண்டு, அதனில் நிற்கும் 'ஆக' என்பதைச் சிந்தாமணி 2551-ம் பாட்டில் வருகின்ற "சுநந்தையே காணென்பார்" என உரை வரையப்பெற்ற "சுநந்தையே ஆக என்பார்" என்பதில் உள்ள 'ஆக' என்பதுபோலப் பொருளொன்றுங் குறியாத அசைநிலையாகக்கொண்டு, இறுதியடிக்கு நெல்லைப் புல் ஒக்குமென்றாலும் அதுவும் உவமை கூறியதுபோல்வதே யென்றும் பொருள்கொள்ளலாம். (நேர் - உவமை, அற்று - அன்னது - போல்வது.)

'நேர் உரைத்தாகவற்றே' என்பதற்கு "ஒத்த உரைமையுடையதாக வலியுற்றதாகும்" என்பதும், "(அது) தகுதியான வார்த்தையுடையதாக வல்லதே" என்பதும் முந்திய உரைகள்.

புருவம் முதலியவைகளை வில் முதலியவை ஒக்குமென்பது நெல்லைப் புல்லொக்குமென்பதுபோலப் போலிவருணனையாமன்றி உண்மைவருணனையாகாதென்பது கருத்து.

'நெல்' நெல்லென்ற தானியத்தைக் குறியாது நெற்பயிரைக்குறித்து நின்றது. நெல், வடிவம் வருணம் பயன் முதலியவைகளில் மிகச் சிறந்து மக்களுக்கன்றி மாடுகள் முதலிய மாக்களுக்கும் பயன்படுவது; புல், வடிவ முதலிய எல்லாக் குணங்களினும் தாழ்ந்து மாக்களுக்கு மட்டும் பயன்படுவது. அவ்வாறாக, நெல்லைப் புல் ஒப்பது போல்வது சீதையின் புருவமுதலியவைகளை வில்முதலியவை ஒப்பதென்பது என்றுணர்க.

கம்பு என்ற தானியம் உலகவழக்கில் கம்பம்புல்லென்றும் புல்லென்றும் சொல்லப்படுகின்றது. நெல்லுத் தானியத்தை உயர்வாகவும் புல்லுத்தானியத்தைத் தாழ்வாகவும் மதிப்பது பெருவழக்கு. 'நெல்'லை நெற்பயிராகக்கொள்ளாது நெற்றானியமென்றுகொண்டு அதனைக் கம்பம்புற்றானியமொப்பதுபோல்வது புருவமுதலியவற்றை வில் முதலியவை ஒப்பதென்றுணரனுமாம்.

கூந்தல் (395, 396, 397-ம் கவிகள்) மூன்றிடங்களினும், கண் (396, 398, 399, 400) நான்கிடங்களினும், தோள் (393, 399) இடை (393, பின்வரும் 402) அல்குல் (394, பின்வரும் 404) மூன்றும் இரண்டிரண்டிடங்களினும் கூறப்பட்டிருக்கின்றன. இவ்வாறு கூறியது 'கூறியது கூறல்' என்னும் குற்றத்தின்பாற்படாதோ? என்னின் இங்கே சீதை வருணனை, முறையான பாதாதிகேசவருணனையாகவாவது கேசாதிபாத வருணனையாகவாவது இல்லாமல், இராவணனுக்கு மோகமூட்டும் நோக்கத்தோடு கூறப்படுவதாயிருத்தலால், எந்த எந்தச் சமயத்தில் எந்த எந்த அவயவத்தைப்பற்றிக் கூறுதல் ஏற்றதோ, அவ்வவ்வமயத்தில் அவ்வவ் வவயவத்தைப்பற்றிக் கூறியதாய் எவ்வகைக் குற்றமும் இல்லாததென்க.

இதற்கு அடுத்த முந்திய பாட்டிலேதான் 'நான் உனக் குரைப்ப தென்னே' என்று சீதையின் அவயவங்களைப் பற்றி நான் சொல்வானேன் என்றவள் இந்தப்பாட்டில் அவைகளைப்பற்றிச் சொல்லுதல் முன்னுக்குப்பின் முரண்பட மொழிதலன்றோவெனின், அந்த முந்திய பாட்டில் 'நான் உனக் குரைப்ப தென்னே' என்னுமுன் 'நாளையேகாண்டியன்றே' என்ற சூழ்ச்சியான சொற்களால் இராவணன் மோகத்தை உச்சநிலையுறச்செய்தாள்; செய்தவள் சீதையை அவன் காணுமளவும் பொறுத்திராமல் அதற்கு முன்னமேயே அவள் அங்க லக்கணங்களை அறிய இயற்கையாக அவனுக்கு எழுந்த அவாவைத் திருத்திசெய்வாளாய், உரைக்கவேண்டியதில்லையென்ற உறுப்புக்களைப்பற்றி உரைக்கலாயினளெனக.

401. "இந்திரன் சசியைப் பெற்றான்; இருமூன்று வதனத் தோன்தன்
தந்தையும் உமையைப் பெற்றான்; தாமரைச் செங்கணானும்
செந்திரு மகளைப் பெற்றான்; சீதையைப் பெற்றாய் நீயும்:
அந்தரம் பார்க்கின், நன்மை, அவர்க்கில்லை, உனக்கே ஐயா!"

இ - ள். "இந்திரன் இந்திராணியையும், (நான்முகன் நாமகளையும்,) பரமசிவன் பார்வதியையும், திருமால் திருமகளையும் (அடையும் பாக்கியம்) பெற்றார்கள்: (அவர்கள்போல) நீயும் சீதையை, (அடையும் பாக்கியத்தை)ப் பெற்றாய். (இவ்வாறாக, நீங்களெல்லாரும் அவரவர் அடைந்த பெண்களால் உடர்வுற்றீர்கள். உங்களுள்) உயர்வு (மிகுதி யாருக்கென்று ஆராய்ந்து) பார்த்தால், (அந்த உயர்வு) மிகுதி, (அழகிற் குறைந்த பெண்களை அடைந்த) அவர்களுக் கில்லை; (அழகிற் சிறந்த பெண்ணை அடைந்த) உனக்கே (உண்டு)."

சசி—இந்திராணி. இருமூன்று வதனத்தோன் தன் தந்தை—ஆறு முகம் உடையோன் (ஆன குமாரக்கடவுளுக்குப்) பிதா (ஆகிய சிவபிரான்). தாமரை செம் கண்ணன்—(செந்) தாமரை (மலர்போலும்)

சிவந்த கண்ணுடையோன் (ஆன திருமால்). செம் திருமகள்—சிவந்த (நிறம் படைத்த) இலக்குமி. அம் தாம்—அழகிய தாம். தாம்—உயர்வு. உயர்வு தாழ்வு என்னும் பொருளுடைய தர தமம் என்ற வடமொழிச் சொற்றொடரில் தரம் உயர்வுகுறித்தல் காண்க. அந்தாம் என்பது வேறுபொருள்களில் மந்தரைசூழ்ச்சிப்படலம் கூ0-ம் கவியில் 'அந்தாம் தீர்ந்துலகளிக்கும்' என்பதிலும் கைகேசிசூழ்வினைப்படலம் ச0-ம் கவியில் 'எனக்கென் மனைவாழும்—பெண்ணால் வந்ததந்தாம்' என்பதிலும் வந்திருத்தல் கண்டுகொள்க. நன்மை—மிகுதி, நல்ல மழை, நல்ல வெயி லென்ற உலகவழக்கிற்போல (தமிழ்ச் சொல்காதி). 'நன்மை உலகவழக்கில் மிகுதிகுறித்தல்போல, அதன் பரியாயபதமாகிய' 'நன்று' பெரிது என்ற பொருள்படச் செய்யுளில் வழங்குதல் 'வைய வாரி நடுந்தது நன்றரோ' என (சிந்தாமணி—37) வருதலால் அறிக. உரையில் நன்று என்பது பெரிது எனப் பொருள்செய்யப்பட்டிருத்தல் காண்க.

உபலக்கணத்தால் 'நான்முகன் நாமகளையும்' என்பது உரையில் சேர்த்துரைக்கப்பட்டது. அடுத்தபாட்டில் நான்முகன் சிவ விட்டுணுக்களோடு சேர்த்துக் கூறப்பட்டிருத்தல் காண்க.

சூர்ப்பநகை இதன்முன் 'நாளையேகாண்டி' என்று இராவணனுக்குச் சீதையைக் காணும் ஆசையை எழுப்பியதுபோல, இப்போது 'சீதையைப் பெற்றாய்' என்று அவளை அடையும் ஆசையை மூட்டிய சூழ்ச்சி கவனித்தற்பாலது.

"நீ அவளைப் பெறுதல் நிச்சயமென்பாள், 'பெற்றாய்' என இறந்த காலத்தாற் கூறினாள்".

"சூர்ப்பநகையின் வார்த்தை—நன்மை அவர்களுக்கு, இல்லை உனக்கு என்று பொருள் கொள்ள இடந்தந்து, இவனுக்குச் சீதையைப்

பெற முயலுதலால் நேரும் தீங்குக்குச் சூசகமாகும் அமங்கலமொழி யாக அவள் வாயில் வந்ததென்று கொள்ளுதல் சம்பிரதாயம்".

402\. "பாகத்தில் ஒருவன் வைத்தான்; பங்கயத் திருந்த பொன்னை
ஆகத்தில் ஒருவன் வைத்தான்; அந்தணன் நாவில் வைத்தான்;
மேகத்தின் மின்னை வென்ற நுண்ணிடை இவளை நீயும்
மாகத்தோள் வீர! பெற்றால், எங்ஙனம் வைத்து வாழ்தி?"

இ-ள். "(மேற் கூறியவாறு சிறந்த அழகுடைய பெண்களைத் தமக்கு உரிமையாக அடைந்தவர்களுள்ளே) ஒருவன் (ஆன சிவன் தான் அடைந்த உமையவளைத் தன்னுடம்பின் இடப்) பாகத்தில் வைத்துக் கொண்டான்; (வேறு) ஒருவன் (ஆன விட்டுணு தான் அடைந்த) இலக்குமியை மார்பகத்து வைத்துக்கொண்டான்; (மற்றொருவனான) பிரமன் (தான் அடைந்த சரசுவதியை) நாவினிடத்தே வைத்துக் கொண்டான்: (அவர்கள் தத்தமக்குரிய மடந்தையரை அடைந்தமை போல) நீயும் சீதையை (அடைவாய்;) அடைந்தால், (அவர்கள் தாங்கள் அடைந்த தையலாரைத் தங்கள் சரீரத்தில் ஒவ்வோரிடத்தில் வைத்துக் கொண்டதுபோல, நீ அடையும்) இவளை (உன் உடம்பில்) எவ்விடத்தில் வைத்துக்கொண்டு வாழப்போகிறாய்?" (அவள் "தலைமேல்வைத்துக் கொள்ளத்தக்கவளென்பது உட்கொள்").

பாகம்—பக்கம்; பாதி. பாகத்தில் என்பதற்கு (உடம்பில் ஒரு அல்லது இடப்)பக்கத்திலென்றேனும் (உடம்பில் ஒரு அல்லது இடப்) பாதியிலென்றேனும் பொருள்கொள்ளலாம். பங்கயம் தாமரை. பொன்—இலக்குமி ஆகம்—மார்பு. அந்தணன்—பிராமணன்—பிரமன். நுண் இடை இவளை—நுண்ணிய இடையையுடைய இவளை—சீதையை. மாகம்—ஆகாயம். மாகத்தோள்—ஆகாயத்(தை அளாவும்படி பருத்துயர்ந்த) தோள் (களையுடைய). "இப்படலத்தின் மூன்றாங் கவியில் 'பொற்றோள் விண்டலங்க ளுறவீங்கி' என்றதை ஒப்பிடுக."

எங்ஙனம்—எவ்விடம்; எவ்விதம். வாழ்தி—வாழ்வாய், எங்ஙனம் வைத்து வாழ்தி—(1) எவ்விடத்துவைத்து வாழ்வாய்; (2) எவ்விதம் வைத்து வாழ்வாய் (வாழமாட்டாய்—இறந்துவிடுவாய்—தொனிப் பொருள்).

"'எங்ஙனம் வைத்து வாழ்தி' என்பது நீ எப்படி வைத்துக் கொண்டு வாழ்வாய்? (வாழமாட்டாய்) என்று அநிஷ்டமாகப் பொருள் படும்படி அமைந்துள்ளதை அறிக."

'பாகத்தில் ஒருவன் வைத்தான்' என்பதில் 'பாகத்தில்' என்பதன் முன், 'சிவன் தன் உடம்பின் ஒரு' என்ற நீண்ட சொற்றொடரோடு 'உமையை' என்ற இன்றியமையாத செயப்படுபொருளையும், 'நாவில் வைத்தான்' என்பதில் 'நாவில்' என்பதன்பின் 'சரசுவதியை' என்ற அவசியமான செய்பொருளையும் கூறாமல் அவைகளை எளிதாகவும் இனி தாகவும் புலப்படச் செய்திருக்கும் கவிசாதுரியம் கண்டு களிக்கத்தக்கது.

403. "பிள்ளைபோல் பேச்சினளைப் பெற்றபின் பிழைக்க லாற்றாய்,
கொள்ளைபோ கின்ற செல்வம் அவளுக்கே கொடுத்தி ஐய!
வள்ளலே! உனக்கு நல்லேன்: மற்றுநின் மனையில் வாழும்
கிள்ளைபோல் மொழியார்க் கெல்லாம் கேடுசூழ் கின்றே னன்றே."

இ - ள். "குழந்தை(களினது மழலைச்சொற்கள்போல இனிமை யான) சொற்களையுடைய சீதையை அடைந்தபின்பு (அவள் சொற்படி செய்யத்) தவறமாட்டாய். (இப்போது மற்றை மாதருக்கு நீ கொடுத்து அவர்களாற் கொள்ளப்பட்டுக்) கொள்ளைபோகிற செல்வத்தை அவளுக்கே கொடுப்பாய். (அப்படி நீ செய்யும்படி அழகுமிக்க அவளை நீ அடையச்செய்கின்றேனாதலால், நான்) உனக்கு நல்லவள் (ஆகின்றேன்: அதனால், வண்டோதரி முதலிய) உன் மனைவிமார் (களை நீ வெறுக்கும் படி செய்து அவர்) களுக்கு (வேண்டுமென்று கெடுதிசெய்ய விரும்ப

வில்லையாயினும் விரும்புவார்போலக் காரியத்தில்) கேடு (செய்யக்) கருது கின்றேன். (ஆகவே அவர்களுக்குக் கெட்டவளாகின்றேன்)"

பிள்ளை - குழந்தை. பிள்ளை, பிள்ளையின்பேச்சுக்கு ஆகுபெயர். பேச்சு-சொல், பிழைக்கல்-பிழைத்தல்-தவறுதல். ஆற்றாய்-செய்யாய்; மாட்டாய். (ஆற்றார் - வலியில்லார். புறநானூறு) பிழைக்கலாற்றாய் - தவறுதல் செய்யாய்-தவறாய்; தவற வலியில்லாய்-தவறமாட்டுவாயல்லை - தவறமாட்டாய். கொடுத்தி-கொடுப்பாய். உன்மனையில் வாழும் கிள்ளை போல் மொழியார்-உன் மனைவிமார். கிள்ளை-கிளி; கிளி, மொழிக்கு ஆகுபெயர். அன்று ஏ ஈற்றசைகள். அன்றே என்பதற்கு அல்லவா வென்று பொருள்கூறலுமாம். பிழைத்தலாற்றாய் என்பதும் பாடம்.

பிழைக்கலாற்றாய்-பிழைத்தல்செய்யாய்-பிழையாய்-இறந்துவிடுவாய் என்பது தொனிஅர்த்தம். இக்கவியிலும் இதற்குமுந்திய இரண்டு கவிகளிலும் சூர்ப்பநகை அபுத்திபூர்வமாக அமங்கலமான தொனிஅர்த் தம் தோன்றக்கூறிய சொற்றொடர்கள் உள்ளன. இத்தகைய சொற் றொடர்களுள் ஒருதொடர் ஒருகவியில் மட்டும் வந்தாலும் சில தொடர் கள் இடையிட்டுச் சிலகவிகளில் வந்தாலும் அவைகள் கவி கருதாது தற்செயலாயமைந்தவை யென்று கருதலாம். அவைகள் மூன்று கவி களில் தொடுத்துவந்திருத்தலால், அவைகள் கவி வேண்டுமென்று கருதி அமைத்தவைகளோ வென்றெண்ணும்படியிருத்தல் கருதுதற்குரியது.

(தொடரும்)

ஸ்ரீ

வே. ப. சுப்பிரமணிய முதலியார்.

---